பக்கங்கள்:19 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 22 ஞாயிற்றுக்கிழமை 07.08.2022 கதிர் 275

**இனி இது ரகசியம் அல்ல!**

அரசியலில் தாம் அநாதை யாகி விடாமல் இருப்பதற்காக – தமக்கென ஒரு திரிசங்கு சொர்க் கத்தையாவது உருவாக்கி விட வேண்டும் என்பதற்காக – நீதியர சர் விக்னேஸ்வரன் ஸ்தாபித்த தமிழ் மக்கள் பேரவை அவருக்கு ஓர் எம்.பி. பதவியை ☞2

# அடுத்த வாரத்தில் சர்வ கட்சி அரசு!

## அமைச்சர் பதவிப் போட்டி ஆரம்பம்

கொழும்பு, ஓகஸ்ட் 07

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் சர்வகட்சி அர சாங்கத்தை அமைக்கும் தீவிர முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வரு கின்ற நிலையில், அடுத்த வாரத்தில் அதற்கான சாதகமான தீர்மா னங்கள் எட்டப்படுமென ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்தது. ☞2

## அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் குறையும் சாத்தியம்

பல அத்தியாவசியப் பொருகளின் விலைகள் 20 வீதம் முதல் 25 வீதம் வரைக் குறைக்கப்பட்டுள்ளன என வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

திறந்த கணக்குகள் மூலம் அத்தியாவசிய பொருள் களை இறக்குமதி செய்வதற்கு மத்திய வங்கி அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து அத்தியாவசிய உணவுப் பொருள்களின் தட்டுப்பாடு ஓரளவு நிவர்த்தி செய்யப்பட் டுள்ளதாக அமைச்சர் நளின் பெர்னாண்டோ ☞2

## சஜித் கட்சியினர் திரும்பவும் செவ்வாய் ரணிலுடன் பேச்சு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலை மையிலான 'சர்வகட்சி ஆட்சி'த்திட்டம் குறித்து சஜித் பிரேமதாஸா தலைமையிலான ஐக் கியமக்கள்சக்திமீண்டும் நாளை மறுதினம் செவ் வாய்க்கிழமை ☞2

## சர்வ கட்சி அரசு அமையவே கோட்டா பதவி விலகினார்!

### நாமல் ராஜபக்ஷ எம்.பி. விளக்கம்



சர்வகட்சி அரசாங் கத்தை அமைப்பதற்கா கவே முன்னாள் ஜனாதி பதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகினார் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித் தார். ☞18

## கொழும்பில் பரவுகிறது கொரோனா உப திரிவு

கொழும்பிலும், அதனை அண்டிய பகுதிகளிலும் கொரோனா உப திரிவு ஒன்று வேகமாக பரவுவதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின், ஒவ் வாமை நோயெதிர்ப்பு மற்றும் உயிரியல் துறைப் பிரி வின் விசேட வைத்தியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள் ளார்.

24 கொரோனா நோயாளர்களின் மாதிரிகளை பரி சோதனைக்கு உட்படுத்தியதில், 20 மாதிரிகளில், இந்தப் புதிய உப திரிவு கண்டறியப்பட்டுள்ளது. TU-5 என்ற கொரோனா உப திரிவானது, கொழும்பில் வேகமாக பர வுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## புத்தளத்தில் கரை ஒதுங்கிய இந்தியப் படகினால் பரபரப்பு



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஓக. 07

இந்தியாவின் மண்டபம் பகுதி பதிவில் இருந்த தூத் துக்குடி படகு ஒன்று புத்தளம் கடற்கரையில் ☞2

## புளொட்டின் அரசியல் பிரிவின் தேசிய மாநாடு இன்று யாழில்!




(கலையமுதன்)

யாழ்ப்பாணம், ஓக. 07

ஜனநாயக மக்கள் விடுதலைமுன்னணியின் பத்தாவது தேசிய மாநாடு இன்றைய தினம் யாழ்ப் பாணம் நாச்சிமார் கோவி லடியில் உள்ள ☞2

## ரணிலின் சர்வகட்சி அரசங்கத்தில் எந்தக் கட்சியும் இணையக் கூடாது

### குமார் குணரத்தினம் கூறுகின்றார்



மக்கள் ஆதரவு இல்லாத தற்போதைய அரசாங்கத்து டன் எந்தவொரு கட்சியும் சர்வகட்சி அரசாங்கத்திற் காக இணையக் கூடாதென சிறிலங்கா முன்னிலை சோச லிசக் கட்சியின் செயலாளர் குமார் குணரத்தினம் ☞2

## திறமை அடிப்படையிலேயே அமைச்சுப் பொறுப்பு பகிர்வு

### சர்வ கட்சி அரசு குறித்து ரணில் உறுதி

சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்கும் போது அனைத்து தரப்பினரின் கருத்துக்களையும் செவி மடுத்து, திறமைகளின் அடிப்படையில், அமைச்சு பொறுப்புக்களை பகிர எதிர்பார்த்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு நாராஹென்பிட்டி எலிப்பிட்டிகல ☞2

## இந்தியத் துணை ஜனாதிபதியாக ஜெகதீப் தன்கர் அமோக வெற்றி!



துணை ஜனாதிபதி தேர்தலில் பாஜக கூட்டணி வேட் பாளர் ஜெகதீப் தன்கர் 528 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.

இந்தியாவின் அடுத்த துணை ஜனாதிபதியை தேர்ந் தெடுப்பதற்கான தேர்தல் நேற்று நடந்தது. வாக்குப்பதிவு காலை 10 மணிக்குத் தொடங்கி 5 மணிக்கு நிறை வடைந்தது. மக்களவை மற்றும் ☞2

## காலிமுகத்திடல் போராளிகள் நுகேகொடையில் போராட்டம்



போராட்டக்காரர்களுக்கு எதிரான அடக்குமுறைகளை அரசாங்கம் உடன டியாக நிறுத்த வேண்டும் என வலியுறுத்தி காலிமுகத்திடல் போராட்டக் ☞2

## இலங்கையின் நலனுக்கு சீனா பாதிப்பு எதனையும் செய்யாதாம்

### வெளிவிவகார அமைச்சர்கள் சந்திப்பில் உறுதி



இலங்கையின் நலன்களிற்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் எதனையும் செய்யமாட்டோம் என உறுதி யளித்துள்ள சீனா, நேர்மையான நம்பகதன்மை மிக்க நண்பனாக விளங்கப்போவதாகவும் தெரிவித் துள்ளது.

ஆசியான் வெளிவிவகார அமைச்சர் மாநாட்டின் போது இலங்கை வெளிவிவகார அமைச்சரை சந் தித்த சீனாவின் வெளிவிவகார அமைச்சர் வாங் யி இதனை தெரிவித்துள்ளார். ☞18

## தமிழ் முற்போக்குக் கூட்டணிக்குள் அமைச்சர பதவியால் முறுகல் நிலை

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அமையவுள்ள சர்வக் கட்சி அரசாங்கத்தில் அமைச்சு பதவி களை பெற்றுக்கொள்ளும் விடயத்தில் தமிழ் முற்போக்கு கூட்டணிக்குள் முறு கல் நிலை ஏற்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்களில் இருந்து அறிய முடிவ தாக செய்தி ஏஜென்ஸி ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. ☞2



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
உறுதிப்படுத்தி, அவரின் தன்னோக்கு இலக்கு அடைந்ததும் செத்துப் போய் விட்டது அல்லது செத்துப் போக விடப்பட்டு விட்டது.

சரஸ்வதி சபதத்தில் வரும் யானை மாலை போட்டதனால் ராணியான கதை மாதிரி, சம்பந்தனின் பார்வை விழுந்தமையால் அரசியல் தலைவரானவர் விக்கி. அவர் ஏற்படுத்தும் தமிழ் மக்கள் பேரவை மூலம் தமிழ்க் கூட்டமைப்புக்கு ஒரு பாடம் படிப்பிக்கிறோம் என்று கறுவிக் கொண்டு வந்த பலரும் மிச்ச சொச்ச வாக்குகளில் கடைசி எம்.பி. பதவியை விக்னேஸ்வரன் சுருட்டி கொள்வதற்குத் துணை போனமையுடன் தாங்களும் கறிவேப்பிலை போல தூக்கி வீசப்பட்டு, நாதியற்றுப் போக வேண்டியதாயிற்று என்று இப்போது மனதுக்குள் கறுவிக் குமைந்து கொண்டிருக்கின்றனர். 'நமக்கு வந்ததும் அது; சிவன் தந்தது அது' என்று ஒருபுறம் கூட்டமைப்பையும் மறுபுறம் விக்கியையும் நோவதை தவிர அவர்களுக்கு இப்போது வேறு நாதி இல்லை.

அண்மைக்காலத்தில் திரும்பவும் கூத்தமைப்பு நடத்தும் கூத்துக்களைப் பார்த்து வெறுத்துப்போன சில அரசியல் பிரதிநிதிகள் – பிரகிருதிகள் – விமர்சகர்கள் – மீண்டும் ஒரு முயற்சியை ஆரம்பித்து இருக்கின்றார்கள். 'தன் முயற்சியில் சற்றும் தளராத விக்ரமாதித்தன் மரத்தில் ஏறி அதில் தொங்கிய உடலைக் கீழே விழுத்திய பின்னர் அதை தூக்கிக் கொண்டு புறப்பட்டான்...' என்ற அம்புலி மாமா கதை போல மீண்டும் ஒரு முயற்சி.

'தமிழ் மக்கள் பேரவை' போய் இப்போது புதிதாக 'தமிழ் மக்கள் பேரியக்கம்' என்ற அமைப்பை ஏற்படுத்த முயற்சிகள் நடக்கின்றனவாம். நல்லது. மாற்று எம்.பிக்களாக யாரை முன் கொண்டு வரும் ஏற்பாடோ யாமறியோம்.

'பேரியக்கம்' என்பது ஏதேனும் பெயருக்கான இயக்கமா அல்லது பேர்களுக்கான (ஆள்களுக்கான) இயக்கமா தெரியவில்லை.

கூத்தமைப்புத் தொடர்பில் மக்கள் மத்தியில் எரிச்சல், கோபம், சீற்றம், ஆத்திரம், ஆதங்கம், வெறுப்பு எல்லாம் இருக்கின்றன என்பது உண்மைதான். ஆனால் அது மட்டும் ஒரு மாற்று இயக்கம் – போட்டி அரசியல் கட்டமைப்பு – தொடங்கப் போதுமான முதல் அல்ல. அதையும் தாண்டி பல விடயங்கள் வேண்டும். முதலில் சுயநலனின்மை. அடுத்தது அர்ப்பணிப்பு. தொடர்ந்து திடசங்கற்பம் அல்லது பற்றுறுதி. அதற்கடுத்து சளைக்கவோ, களைக்கவோ இடமில்லா விடாமுயற்சி. அத்துடன் சற்றுப் பணபல பின்னுதவி. அவை இருந்தால்தான் அது பேரியக்கமாகும். அல்லது அது பெயர்களுக்கான அல்லது பேர்(வழி)களுக்கான இயக்கமாகப் படுத்து விடும். இது என் சிறிய ஆலோசனை. அவ்வளவுதான்.

★ ★ ★

'படம் பார்'; 'பாடம் படி' – இது தமிழ் மலர் முதலாம் வகுப்புப் புத்தகத்தில் படித்ததாக நினைவு. சர்வதேச வெளியுறவுக் கொள்கையில் ரணிலின் அரசு இப்போது அந்த மட்டத்தில்தான் இருப்பதாகத் தோன்றுகின்றது.

கம்போடியாவில் ஆசியான் மாநாட்டுக்குப் போன இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரிக்கு அங்கு இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரும், அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் (செயலாளர்) பிளிங்கனும் இப்படி வெளியுறவுக் கையாளுகைகளில் அரிச்சுவடிப் பாடம் எடுத்துத்தான் அனுப்பி இருக்கின்றனர் என்று கேள்வி.

அதன் பின்னர்தான் சீன உளவுக் கப்பலை இலங்கைக்கு அனுப்பும் திட்டத்தைப் பிற்போடும்படி சீனாவைக் கெஞ்சும் நிலைக்கு கொழும்பு தள்ளப்பட்டதாகவும் தகவல். சட்டம்பி வேலை சரியாகத்தான் நடந்திருக்கின்றது என்கிறார் வெளியுறவுத்துறை அமைச்சின் முக்கிய அவதானி ஒருவர்.

பாவம் அலி சப்ரி. திறமையான ஜனாதிபதி சட்டத்தரணியான அவருக்கு நீதி மன்றங்கள் அத்துபடி. ஆனால் சர்வதேச ராஜ தந்திரோபாயங்கள் புதியவை தானே...! கம்போடியாவில் இடம்பெற்ற ஆசியானில் அவருக்கு முதல் பாடம் என்றால், அடுத்த பாடம் – அடுத்த மாதம் அவருக்கு ஜெனிவாவில் காத்திருக்கின்றது. நேரத்துடன் நியூஷன் எடுத்துப் படித்துத் தயார் பண்ணிக்கொண்டு அந்த வகுப்புக்கு போவது நல்லது என்பதும் அவருக்குத் தெரியும். கம்போடியாவில் இருந்து திரும்பியதும் ஜெனிவாவுக்கான பரீட்சைக்கு பாடத்தை உருப்போட அவர் ஆரம்பித்து விடுவார் என நம்பலாம்.

– மின்னல் –

## அடுத்த வாரத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இந்நிலையில் தற்போதைய அமைச்சரவையை மேலும் விஸ்தரிப்பது குறித்து ஜனாதிபதி தீவிரமாக ஆராய்ந்து வருகிறார் எனவும், ஒரு சிலர் அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொள்ள தீவிர ஆர்வம் காட்டி வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பது குறித்து கடந்த சில தினங்களாக பல கட்சிகளுடனும் ஜனாதிபதி முன்னெடுக்கும் பேச்சுவகள் சாதகமாக முடிவடைந்துள்ளன எனஐ.தே.கட்சி தெரிவிக்கின்றது.

சர்வகட்சி அரசாங்கத்தில் இணைந்து செயற்பட கட்சிகள் பலவும் இணக்கம் தெரிவித்துள்ளமையுடன், எதிர்க்கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் சிலரும் சர்வகட்சி அரசாங்கத்தில் இணைந்து கொள்ளத் தீர்மானித்துள்ளனர் எனவும் அக்கட்சியின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

எனினும், சர்வகட்சி அரசாங்கம் அமையப்பெறும் போது அமைச்சரவை எண்ணிக்கை அதிகரிக்க வேண்டியுள்ளதால் தற்போது புதிதாக ஏழு அமைச்சர்களுக்கான அமைச்சுப் பதவிகள் தயார்ப்படுத்தப்பட்டுள்ளன என அறிய முடிகின்றது.

இந்த ஏழு அமைச்சுகளில் முஸ்லிம் கட்சிகளின் பிரதிநிதி ஒருவருக்கும், மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் எம்.பி ஒருவருக்கும், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் உறுப்பினர்கள் இருவருக்கும் அமைச்சுப்பதவிகள் ஒதுக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேபோல் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் இருவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டணிக் கட்சியாக செயற்படும் எம்.பி ஒருவருக்கும் அமைச்சுப் பதவிகளை எடுத்துக்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் நேரடியாக கோரிக்கை விடுத்துள்ளார். அது குறித்து சாதகமான பதிலை அவர்கள் வழங்கியுள்ளனர் எனவும் தெரிய வருகின்றது.

எவ்வாறு இருப்பினும் சர்வகட்சி அரசாங்கத்தில் இணைந்துகொள்ளும் சகலருக்கும் அமைச்சுப்பதவிகளை பெற்றுக்கொடுக்க முடியாதுள்ள நிலையில் அவர்களுக்கு வேறு சலுகைகளைப் பெற்றுக்கொடுக்கவும் ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் என ஜனாதிபதியுடன் நெருக்கமாகப் பணியாற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் உறுதிப்படுத்தினார்.

## சஜித் கட்சியினர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஜனாதிபதியைச் சந்தித்து கலந்துரையாட இருக்கின்றது எனக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. 'சர்வகட்சி ஆட்சி' வேலைத் திட்டங்கள் தொடர்பில் இச்சந்திப்பில் விவரமாகக் கலந்துரையாடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஏற்கனவே முதல் சுற்றுப் பேச்சு கடந்த சனிக்கிழமை நடைபெற்றமை தெரிந்ததே.

## இந்தியத் துணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மாநிலங்களவை உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

இந்த தேர்தலில், பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் மேற்கு வங்காள முன்னாள் ஆளுநர் ஜெகதீப் தன்கர் ( வயது71), எதிர்க் கட்சிகளின் சார்பில் மார்கரெட் ஆல்வா (வயது 80) ஆகியோர் போட்டியிட்டனர்.

மாலை 5 மணிக்கு வாக்குப்பதிவு நிறைவடைந்ததும் வாக்கு எண்ணிக்கை தொடங்கியது. நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் சேர்ந்து 780 எம்.பி.க்கள் உள்ளனர். இதில், 725 பேர் வாக்களித்தனர். 92.94 சதவீத வாக்குகள் பதிவாகியிருந்தன. இதில், 15 வாக்குகள் செல்லாதவை என அறிவிக்கப்பட்டது.

வாக்கு எண்ணிக்கையின் முடிவில், பாஜக கூட்டணி வேட்பாளர் ஜெகதீப் தன்கர் 528 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் மார்கரெட் ஆல்வா 182 வாக்குகள் மட்டுமே பெற்று தோல்வி அடைந்தார். தேர்தல் முடிவுகளை, மக்களவை பொதுச் செயலாளர் உத்பல் குமார் சிங் அறிவித்தார். இதையடுத்து துணை ஜனாதிபதியாக ஜெகதீப் தன்கர் பதவியேற்க உள்ளார்.

## காலிமுகத்திடல் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
காரர்களினால் நேற்று நுகேகொடையில் கண்டன பேரணியொன்றும் கூட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

பேரணியை அடுத்து நேற்று மாலை நுகேகொடை ஆனந்த சமரகோன் திறந்த வெளி அரங்கில் பிரதான ஒன்றுகூடல் நடைபெற்றது.

அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் இணைந்து, அடக்குமுறை, அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மற்றும் வலுக்கட்டாயமாக ஆள்கள் காணாமல் ஆக்கப்பட்டமை ஆகியவற்றுக்கு எதிராக இந்த எதிர்ப்புப் பேரணியை நேற்று முன்னெடுத்தன.

## புத்தளத்தில் கரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கரையொதுங்கியதால் பரபரப்பு ஏற்பட்டது.

இந்தியாவில் இருந்து இலங்கை கடற்பரப்பிற்குள் நுழைந்த இந்தியாவின் TNI/TN/11/MO/1108 இலக்க நாட்டுப் படகு ஒன்று கற்பிட்டி கடற் பரப்பில் கடற்படையினரல் கண்டு பிடிக்கப்பட்டது. இப்படகின் உரிமையாளர் சேதுநகர், இராமநாதபுரம் முகவரியை உடைய சாகுல் ஹமீட் றபியுள்ளாஹான் என ஆரம்பத்தில் அடையாளம் காணப்பட்டது.

இவ்வாறு புத்தளம் வத்தளங்குண்டுப் பகுதியில் இனம் காணப்பட்ட படகில் பயணித்தவர்கள் தொடர்பில் கடற்படையினர் தீவிர தேடுதலில் ஈடுபட்டனர்.

இந்தப் படகு கடந்த முதலாம் திகதி தூத்துக்குடியில் இருந்து 4பேருடன் கடற்றொழிலிற்கு புறப்பட்ட சமயம் அலையில் அகப்பட்ட படகு என அடையாளம் காணப்பட்டது.

இவ்வாறு அலையில் அகப்பட்ட சமயம் படகில் இருந்த 4 பேரில் இருவர் ஏனைய படகுகளால் காப்பற்றப்பட்ட போதும் எஞ்சிய இருவரும் இதுவரை மீட்கப்படவில்லை எனத் தூத்துக்குடி மீனவர்கள் சார்பில் தெரிவிக்கப்படுகின்றது.

## புளொட்டின் அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ராஜா ஹம்சிகா மண்டபத்தில் இடம்பெற ஏற்பாடாகியுள்ளது.

இதன்போது சகோதர கட்சிகளின் தலைவர்களும் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளனர்.

புளொட்டின் அரசியல் பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் பத்தாவது பொதுச்சபை கூட்டம் நேற்றைய தினம் இணுவில் பகுதியிலுள்ள தனியார் மண்டபமொன்றில் சுந்தரம் அரங்கில் இடம்பெற்றது.

இதன்போது கட்சியின் புதிய நிர்வாகமும் தெரிவு செய்யப்பட்டது.

இதன்படி அக்கட்சியின் தலைவராக மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவு செய்யப்பட்டார். கட்சியின் செயலாளராக நா.இரட்ணலிங்கமும் பொருளாளராக க.சிவநேசனும்ஊடகப் பிரிவின் தலைவராக பா. கஜதீபனும், சர்வதேச பேச்சாளராக செ.ஜெகநாதனும் தெரிவாகினர்.

மூன்று வருடங்களுக்கு ஒரு முறை இடம்பெறும் பொதுச்சபைக் கூட்டத்தில் சர்வதேச நாடுகளில் இயங்குபவர்கள் உட்பட145 பேராளர்கள் வரை கலந்து கொண்டிருந்தமையுடன் தீர்மானங்களும் எட்டப்பட்டிருந்தன.

## ரணிலின் சர்வகட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தெரிவித்துள்ளார்.

புதிதாக பதவியேற்ற ஜனாதிபதியுடன் அரசாங்கமும் மக்கள் ஆதரவு இல்லாமலே தெரிவு செய்யப்பட்டுள்ளது. மக்கள் ஆதரவு தற்போது மக்களிடம் மாத்திரமே உள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் நெருக்கடி நிலை தொடர்பில் மேலும் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் சர்வகட்சி அரசாங்கத்தையே விரும்புகின்றது. எனினும், இந்த சர்வகட்சி அரசாங்க திட்டம் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கோ இலங்கையின் பொருளாதார நெருக்கடியை தீர்த்து நாட்டை கட்டியெழுப்பவோ அல்ல. மாறாக இலங்கை வாழ் குடிமக்களை அடக்குவதற்காகவே.

இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு அரசாங்கத்திடம் எந்த யோசனைகளும் தீர்வுகளும் இல்லை. மத்திய வங்கி ஆளுநரின் கூற்றுப்படி, அரசாங்கத்திடம் எந்தப் பொருளாதார சீர்திருத்தத் திட்டங்களும் இல்லை.

இந்த நிலையில் அரசாங்கத்தை பாதுகாப்பதற்காக அவசரகால சட்டத்தையும் ஜனநாயகமற்ற சட்டங்களையும் அரசாங்கம் பயன்படுத்தி வருகின்றது.

அரசாங்கத்திற்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஆதரவளிக்காத அனைத்துக் கட்சிகளும் சர்வகட்சி அரசாங்கத்தை எதிர்க்க வேண்டும்.

மக்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் மக்களுடன் இணைந்து செயல்பட வேண்டும். – என அவர் கூறியுள்ளார்.

## தமிழ் முற்போக்குக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
சர்வக்கட்சி அரசாங்கம் மற்றும் அமைச்சு பதவிகள் தொடர்பில் ஏற்கனவே எட்டப்பட்டிருந்த இணக்கப்பாட்டைமீறும் வகையில் தலைமைப்பீடம் செயற்படுவதால், பங்காளிக்கட்சி தலைவரொருவர் கடும் அதிருப்தியில் இருக்கிறார் எனவும் அவ் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

ஜனாதிபதியை தெரிவுசெய்வதற்காக நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வாக்கெடுப்பின்போது டலஸ் அழகப்பெருமவை ஆதரிக்கும் முடிவை எடுத்திருந்த தமிழ் முற்போக்கு கூட்டணி, கட்சிக்குள் சில இணக்கப்பாடுகளையும் ஏற்படுத்திக் கொண்டது.

மேலும், புதிய நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படும்வரை அமையும் சர்வக் கட்சி இடைக்கால அரசில், ஏற்கனவே அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சு பதவிகளை வகித்த இருவரும், பதவிகளைஒ பொறுப்பேற்கமாட்டார்கள் எனவும், ஏனையோருக்கு வாய்ப்பளிக்கப்படும் எனவுன் உறுதியளிக்கப்பட்டிருந்தது.

இதில் பங்காளிக்கட்சி தலைவரொருவருக்கு அமைச்சரவை அமைச்சு பதவி பெற இடமளிக்கப்படும் எனவும் உறுதியளிக்கப்பட்டிருந்ததாம்.

இருப்பினும், தற்போது ஏனைய இருவருமே அமைச்சு பதவிகளை பெறுவதில் ஆர்வம்காட்டி வருகின்றனர் எனவும், இதனால் கடும் அதிருப்தியில் இருக்கும் பங்காளிக்கட்சி தலைவர், விரைவில் தீர்க்கமானதொரு அரசியல் முடிவை எடுக்கக் கூடும் எனவும் தெரியவருகின்றது.

## திறமை அடிப்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மாவத்தையில் அமைந்துள்ள ராமஞ்ஞை நிக்காய பௌத்த பீடத்தின் தலைமையகத்திற்கு சென்ற ஜனாதிபதி, மாநாயக்கர் மகுலேவே விமல தேரரை சந்தித்து ஆசி பெற்றுக்கொண்டமையுடன் அதன் பின்னர் பௌத்த பிக்குகளை சந்தித்த போதே இதனை கூறியுள்ளார்.

சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பது தொடர்பாக அரசாங்கம் தற்போது சில அரசியல் கட்சிகளுடன் பேச்சு நடத்தி வருகிறது. அந்த பேச்சு வெற்றியளித்துள்ளது.

மேலும் இந்தக் கட்சிகளின் பல்வேறு கொள்கைகளை கொண்ட அணிகள் இருக்கின்றன. பேச்சில் பெரும்பான்மையான நிலைப்பாடுகளுக்கு இடமளித்து, சரியான வேலைத்திட்டத்தை நாட்டுக்காக முன்வைப்பது இதன் நோக்கம் எனவும் அங்கு ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

## அத்தியாவசியப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நாள்களில் பல அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் மேலும் குறைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒரு கிலோ பருப்பின் விலை சுமார் 150 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# குரங்கு அம்மை தொற்றுக்கு முகங்கொடுக்க நாம் தயார்!

## தொற்று நோய் ஆய்வுப் பிரிவு தெரிவிப்பு

குரங்கு அம்மை தொற்றுக்கு முகங்கொடுக்கத் தயாராகவுள்ளதாக தொற்று நோய் ஆய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்று நோய் ஆய்வுப் பிரிவு பிரதானி விசேட வைத்தியர் சமித கினிகே இதனைத் தெரிவித்துள்ளார்.

குரங்கு அம்மை தொற்று நாட்டில் பரவுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



மேலும் இதுவரை நாட்டில் குரங்கு அம்மை தொற்றுக்குள்ளான எவரும் அடையாளம் காணப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.







### மணமகன் விபரம்

**பிறந்த திகதி**-24.11.1987
**மதம்**-இந்து
**ஜாதி**-Vஆண்
**நட்சத்திரம்**-பூராடம்
**கி.பா**-14
**செவ்**-10ல்
**தகைமை**-QUANTIFY SARVEYING
**தொழில்**-UK,PR
**எதிர்பார்ப்பு**- UKOR CEYLON மணமகள் தேவை

**பிறந்த திகதி**-28.05.1993
**மதம்**-இந்து
**ஜாதி**-V ஆண்
**நட்சத்திரம்**-மகம்
**கி.பா**-6
**செவ்**-14ல்
**தகைமை**-G.C.E A/L
**தொழில்**-பொலிஸ்பதிவாளர்
**எதிர்பார்ப்பு**- அரசசேவை மணமகள்

**பிறந்த திகதி**-22.02.1992
**மதம்**-இந்து
**ஜாதி**-P ஆண்
**நட்சத்திரம்**-சித்திரை 2
**கி.பா**-10
**செவ்**-10ல்
**தகைமை**-I.T DIPLOMA
**தொழில்**-(CTB) CLERK
**எதிர்பார்ப்பு**- அரசசேவை மணமகள்

**பிறந்த திகதி**-25.10.1988
**மதம்**-இந்து
**ஜாதி**-V ஆண்
**நட்சத்திரம்**-அச்சுவினி
**கி.பா**-52
**செவ்**-1ல்
**தகைமை**-B.SC MSC ENG
**தொழில்**-COMPANY WORK
**எதிர்பார்ப்பு** - பட்டதாரி மணமகள்

**பிறந்த திகதி**-06.08.1989
**மதம்**-இந்து
**ஜாதி**-P ஆண்
**நட்சத்திரம்**-அத்தம்
**கி.பா**-31
**செவ்**-12ல்
**தகைமை**-I.T. DIPLOMA
**தொழில்**-. COMPANY MANAGER
**எதிர்பார்ப்பு** - பட்டதாரி மணமகள்

**பிறந்த திகதி**-25.03.1993
**மதம்**-இந்து
**ஜாதி**-V ஆண்
**நட்சத்திரம்**-அச்சுவினி
**கி.பா**-46
**செவ்**-8ல்
**தகைமை**-I.T. DIPLOMA
**தொழில்**-STATION MASTER
**எதிர்பார்ப்பு**- பட்டதாரி அரசசேவை மணமகள்

**பிறந்த திகதி**-30.04.1992
**மதம்**-இந்து
**ஜாதி**-V ஆண்
**நட்சத்திரம்**-உத்தரட்டாதி
**கி.பா**-33
**செவ்**-2ல்
**தகைமை**-ELECTROINC ENG
**தொழில்**- விரிவுரையாளர்
**எதிர்பார்ப்பு**- பட்டதாரி மணமகள்

**பிறந்த திகதி**-28.01.1991
**மதம்**-இந்து
**ஜாதி**-V ஆண்
**நட்சத்திரம்**-திருவாதிரை
**கி.பா**-31
**செவ்**-1ல்
**தகைமை**-MBBS
**தொழில்**-DOCTOR
**எதிர்பார்ப்பு**- DOCTOR ENG மணமகள் தேவை

### மணமகள் விபரம்

**பிறந்த திகதி**-02.05.1987
**மதம்**-இந்து
**ஜாதி**-GURUKULAM
**நட்சத்திரம்**-மிருகசீரிடம் 4
**கி.பா**-7
**செவ்**-12ல்
**தகைமை**-MBBS
**தொழில்**-DOCTOR
**எதிர்பார்ப்பு**- DOCTOR ENG BANK MANAGER உயர் பதவி மணமகன்

**பிறந்த திகதி**-28.11.1990
**மதம்**-இந்து
**ஜாதி**-GURUKULAM
**நட்சத்திரம்**-ரேவதி 5'5"
**கி.பா**-34
**செவ்**-1ல்
**தகைமை**-I.TDIPLOMA
**தொழில்**-.COMPANY MANAGER (விரிவுரையாளர்)
**எதிர்பார்ப்பு**- அரசசேவை தனியார் மணமகன் வெளிநாடு முன்னரிமை

**பிறந்த திகதி**-06.12.1995
**மதம்**-இந்து
**ஜாதி**-V பெண்
**நட்சத்திரம்**-ரோகினி
**கி.பா**-16
**செவ்**-10ல்
**தகைமை**-BUSINESS MANAGEMENT
**தொழில்**-COMPANY
**எதிர்பார்ப்பு**- பட்டதாரி உள்நாடு வெளிநாடு மணமகன்

**பிறந்த திகதி**-17.02.1979
**மதம்**-இந்து
**ஜாதி**-V பெண்
**நட்சத்திரம்**-சித்திரை 2
**கி.பா**-5
**செவ்**-10ல்
**தகைமை**-G.C.E.A/L
**தொழில்**- .-
**எதிர்பார்ப்பு**- அரசசேவை தனியார் மணமகன்

**பிறந்த திகதி**-26.01.1988
**மதம்**-இந்து
**ஜாதி**-GURUKULAM
**நட்சத்திரம்**-பரணி
**கி.பா**-36
**செவ்**-6ல்
**தகைமை**-B.SC
**தொழில்**- BANK MANAGER
**எதிர்பார்ப்பு**- பட்டதாரி அரசசேவை

**பிறந்த திகதி**-12.04.1991
**மதம்**-இந்து
**ஜாதி**-V பெண்
**நட்சத்திரம்**-பூராட்டாதி 2
**கி.பா**-28
**செவ்**-1ல்
**தகைமை**-B.SC I.T
**தொழில்**- COMPANY
**எதிர்பார்ப்பு**- வெளிநாடு- பட்டதாரி மணமகன்

**பிறந்த திகதி**-12.12.1993
**மதம்**-இந்து
**ஜாதி**-V பெண்
**நட்சத்திரம்**-அனுசம்
**கி.பா**-47
**செவ்**-4ல்
**தகைமை**-I.C.T SOFTWARE ENG
**தொழில்**- COMPANY
**எதிர்பார்ப்பு**- அரசசேவை மணமகன்

**பிறந்த திகதி**-02.08.1993
**மதம்**-RC
**ஜாதி**-V பெண்
**நட்சத்திரம்**-திருகோணம்
**கி.பா**-88
**செவ்**-8ல்
**தகைமை**-B.SC SOFTWARE
**தொழில்**- SINGAPOUR WORK
**எதிர்பார்ப்பு**- SINGAPORE CEYLON மணமகன்

Australia, Canada, UK, USA,Swiss, Germany, Italy, France, Newzeland- இந்த நாடுகளில் Visa உள்ளவர்கள் இல்லாதவர்கள் மணமகன் மணமகள் விபரம் தந்தால் திருமணம் நிறைவேற்றித் தருவோம்.

காலைக்கதிர் தொலைபேசி 021 222 3000

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.












காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## புதிய பொருளாதார பாதை எது?

நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் – சிக்கலுக்குள் மாட்டியுள்ளது என்பதுதான் நிலைமை. முதலில் இந்த நிலையிலிருந்து விடுபட்டு மூச்சு விடக் கூடிய சாதாரண நிலைமைக்கு நாடு முன்னேற வேண்டும். அதன் பின்னர்தான் அடுத்த கட்டம் குறித்து சிந்திக்க முடியும். சிந்திக்க வேண்டும்.

உடனடி நெருக்கடித் தீர்வுக்காக புதிய கடன்கள், உதவிகளைத் தேடி அலைவது தவிர்க்க முடியாததுதான். ஆனால் பொருளாதாரத்தை நேர் சீராக்க அப்படி வெளிநாட்டு உதவிகள், வெகுமானங்கள், கடன்களைத் தேடி உலைவதுதான் நிரந்தரத் திட்டமாக இருக்கக் கூடாது; இருக்க முடியாது.

ஊடனடி அழுத்தத்திலிருந்து வெளியே வருவதற்கான திட்டம் முதலில். அதன் பின்னர் நாட்டின் பொருளாதாரத்தை மீள உரிய தடத்துக்குக் கொண்டு வந்து நேர்சீராக்குவதற்கான தந்திரோபாயம். இப்படி உத்திகளை வகுத்துச் செயற்பட வேண்டும்.

புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த விடயங்களை நன்கு அடையாளம் கண்டு, அவற்றைத் தெளிவுடன் வேறுபடுத்திக் கையாள முயல்கின்றார் என்பதை அவரே கோடி காட்டியிருக்கின்றார்.

'ஸ்ரீலங்காவை மீள ஒழுங்கமைப்போம்' என்ற இரண்டு நாள் நிகழ்வில் பிரதான உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த விடயங்களை வரிசைப்படுத்தி வெளியிட்டிருக்கின்றார்.

சர்வதேச நாணய நிதியம் சமர்ப்பிக்கப்போகின்ற திட்டம் நல்லதோ, கூடாதோ, எமக்குப் பிடிக்கின்றதோ, பிடிக்கவில்லையோ, அதை நாம் ஏற்றுத்தானாக வேண்டும். இன்றைய நெருக்கடி நிலையில் இருந்து சற்று சுவாசித்து நாடு வெளியே வருவதற்கு அதைத் தவிர வேறு வழி ஏதும் கிடையாது என்ற உண்மையை அந்த நிகழ்வில் பட்டவர்த்தனமாக – வெளிப்படையாக – அவர் ஒப்புக் கொண்டிருக்கின்றார்.

முதலில் சர்வதேச நாணய நிதியத்துடன் நாடு ஓர் உடன்பாட்டுக்கு வரவேண்டும். அதன் கீழ் நாட்டைத் தாக்குப் பிடிக்கக் கூடிய நிலைக்கு மாற்றக் கூடிய பேண்தகு கடன் திட்டம் ஒன்றுக்கு – சாத்தியமான உதவி நடவடிக்கை ஒன்றுக்கு – நாம் இணங்க வேண்டும்.

இதைச் செய்து, நாட்டின் பொருளாதாரத்தை அதன் உரிய தடத்துக்கு ஏற்றி விட்டு, அடுத்த கட்டத்தைப் பற்றி சிந்தித்து நாம் தீர்மானிக்க வேண்டும் என்கின்றார் அவர்.

பழைய பொருளாதார மாதிரிகள் இனியும் எமது நாட்டுக்குப் பொருந்தி வரா. அவற்றில் தங்கியிருக்க முடியாது. உலகளாவிய மாற்றங்களைக் கவனத்தில் எடுத்து, புதுமையான சிந்தனையோடு, எமது நாட்டுக்கு உகந்த ஒரு பொருளாதாரக் கொள்கை மாற்றத்தை அடையாளம் கண்டு, வகுத்து, அதன்படி நாடு செயற்பட வேண்டும் என்ற ஜனாதிபதி ரணிலின் யோசனை ஊன்றிக் கவனிக்கப்பட வேண்டும்.

இதேபோன்ற ஒரு பெரும் பொருளாதார மாற்றத்துக்கு 1977இல் நாடு புகுந்தமை கவனிக்கத்தக்கது. மேற்குலகின் கதவைத் திறப்பதற்காக திறந்த பொருளாதாரக் கொள்கை என்ற மந்திரக்கோலை அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா கையில் எடுத்தார். அதனால் அதற்கு முன்னர் வரை இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்ட – சுயதேவையைத் தன்னிறைவுடன் பூர்த்தி செய்யும் – கட்டுப்பாடான பொருளாதாரக் கொளகை தகர்ந்தது.

1977 அறிமுகப்படுத்தப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கை பெரும் சுபீட்சத்துக்கு வழி செய்யும் என்று பீற்றிக் கொள்ளப்பட்டாலும் அதன் விளைவை நாடு இன்று எதிர்கொண்டு நிற்கின்றது.

இதிலிருந்து நகர – மீள – இந்த நெருக்கடியிலிருந்து வெளியே வர – பின்பற்றப் போகின்ற புதிய பொருளாதாரக் கொள்கை யாது? ஜே.ஆரின் மருமகன் ரணில் கையில் எடுக்கப்போகும் மந்திரக்கோல் எது? தெரியவில்லை!

# காலத்தைக் கடத்தும் அரசின் நிகழ்ச்சி நிரலுக்கு கூட்டமைப்பினரும் ஒத்துழைப்பு வழங்குகின்றனர்!

## உறவுகள் குற்றச்சாட்டு




இலங்கை அரசாங்கத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பேச்சை நடத்தியமை அரசாங்கத்தின் கபட நோக்கத்துக்கு மீண்டும் துணைபுரிவதாகவே அமைந்துள்ளதாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர் அமைப்பின் ஊடகப் பேச்சாளர் தமிழினி மாலவன் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழர் மீது மேற்கொள்ளப்பட்ட கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு குற்றங்கள் மற்றும் மனித இனத்துக்கெதிரான குற்றங்களுக்கு காரணமானவர்களோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பேச்சை நடத்தியமை, ஒற்றையாட்சி அரசாங்கத்தை பலப்படுத்தி, கூட்டமைப்பின் கதிரை அரசியலுக்கு வெள்ளை அடிக்கும் செயலாகவே நாம் பார்க்கின்றோம்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை, இனப்படுகொலை என்பன தொடர்பாக சர்வதேசமே விசாரணைகளை நடத்த வேண்டும் என்பதுதான் எமது கோரிக்கையாகும்.

இவை தொடர்பாக அரசாங்கத்துடன் பேச்சை நடத்துவற்கான ஆணையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஈழத்தமிழர் ஒரு போதும் வழங்கவில்லை.

இலங்கை அரசாங்கம் உள்ளூர் பொறிமுறையின் மூலமாகத் தீர்வு காணப்படும் எனத் தொடர்ந்து தெரிவித்து வரும் நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதனுடன் பேச்சுக்களை நடத்தியமை சர்வதேச விசாரணையில் இருந்து இலங்கை அரசாங்கத்தை பிணை எடுக்கும் சதி முயற்சியாகவே நாம் பாக்கின்றோம்.

சர்வதேச விசாரணையில் இருந்து தப்பித்துக்கொள்ள சிங்கள இனவழிப்பு அரசாங்கம் ஒவ்வொரு ஐ.நா. அமர்வையும் சமாளிக்க கூட்டமைப்பின் கதிரை அரசியலை சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி வருகின்றது.

இனவழிப்பு மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக ஒரு போதும் கொலையாளிகள் தீர்வைத் தரப்போவதில்லை.

மீண்டும் மீண்டும் அதில் நம்பிக்கை வைத்துச் செயற்படுவது இலங்கை அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்குள் கூட்டமைப்பைக் கொண்டு செல்வதற்கே வழிவகுக்கும்.

மேலும், இனவழிப்பில் ஈடுபட்ட குற்றவாளிகளிடம் தீர்வை எதிர்பார்ப்பதோ அதற்கான பேச்சுக்களை நடத்துவதோ இனவழிப்பு குற்றவாளிகளை நீதிவான்களாக்கும் செயலாகும்.
- என்றார்.

# காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் யதார்த்தத்தை விளங்க வேண்டும்!

## திஸ்ஸ விதாரண அறிவுரை



ஜனநாயக ரீதியிலான போராட்டத்தில் ஈடுபடும் உரிமை நாட்டு மக்களுக்கு உண்டு. காலி முகத்திடல் போராட்டக்காரர்கள் யதார்த்த நிலைமையை விளங்கிக்கொள்ள வேண்டும். தொடர் போராட்டம் நாட்டை பலவீனப்படுத்தும் என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

காலி முகத்திடல் போராட்டக்களம் தொடர்பில் வினவிய போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தின் தன்னிச்சையான செயற்பாடுகளின் காரணமாக நாட்டில் என்றுமில்லாத அளவிற்கு போராட்டங்கள் தோற்றம் பெற்றன.

காலிமுகத்திடல் ஜனநாயக போராட்டத்தின் காரணமாக முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகினார். அதனைத் தொடர்ந்து முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகினார்.

அரசமைப்பிற்கு அமைவாகவே நாடாளுமன்றத்தின் ஊடாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சர்வகட்சி அரசாங்கத்தில் ஒரு தரப்பினரும் இணையாத பட்சத்தில் மாற்று வழிமுறைகள் தொடர்பாக அவதானம் செலுத்த வேண்டியுள்ளது.

அரசாங்கத்தை பொறுப்பேற்பவர்கள் அனைவரையும் 'கோ ஹோம்' என குறிப்பிட்டால் நாட்டில் அடுத்தகட்ட நிலைமை என்ன என்பது தொடர்பாக அவதானம் செலுத்த வேண்டும். பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்துள்ள நிலையில் நிலையான அரசாங்கம் ஒன்று தோற்றம் பெறாவிடின் எந்த நாடும் எமக்கு உதவி புரியாது.

ஜனநாயக ரீதியிலான போராட்டத்தில் ஈடுபடும் உரிமை நாட்டு மக்களுக்கு உண்டு. காலிமுகத்திடலில் போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் யதார்த்த நிலையை விளங்கிக்கொள்ள வேண்டும். தொடர் போராட்டங்கள் நாட்டை பலவீனப்படுத்தும் என்பதற்கு பல நாடுகள் உதாரணமாக உள்ளன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கு காலவகாசம் வழங்க வேண்டும். மக்களால் கடுமையாக விமர்சிக்கப்படும் அரசியல்வாதிகளை அரசாங்கத்தில் இணைத்துக் கொள்ளக் கூடாது என்பதை ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளோம். - என்றார்.

# கியு.ஆர். கோட்டை ஏனையோர் பெறும்வகையில் காட்சிப்படுத்துவதைத் தவிர்க்கக் கோரிக்கை!

பொதுமக்கள் தங்கள் தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திரம் தொடர்பான கியு.ஆர். குறியீட்டை ஏனைய தரப்பினர் பெற்றுக்கொள்ளும் வகையில் காட்சிப்படுத்துவதைத் தவிர்க்குமாறு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.

இவ்வாறு காட்சிப்படுத்தப்பட்ட கியு.ஆர். குறியீடுகளை ஏனைய தரப்பினர் படம் எடுத்து எரிபொருளைப் பெற்ற சில சந்தர்ப்பங்கள் பதிவாகியுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.


இதன்காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் தற்போது பயன்படுத்தும் கியு.ஆர். குறியீட்டை ரத்து செய்து அதற்கான புதிய குறியீட்டை பெறுவதற்கான வசதிகளை செய்து கொடுத்துள்ளதாகவும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திரத்தின் பிரகாரம் எரிபொருளைப் பெறுவதற்கு 53 லட்சத்து 98 ஆயிரத்து 63 பேர் பதிவு செய்துள்ளனர் என எரிசக்தி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road, Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# முன்பள்ளி பெயர்கள் இராணுவத்தால் மாற்றம் மாணவர்களை அனுப்பத் தயங்கும் பெற்றோர்!

## வடக்கு ஆளுநருக்கு சிறிதரன் எம்.பி. காட்டமான கடிதம்


கிராம அபிவிருத்திச் சங்கம்
RURAL DEVELOPMENT SOCIETY
Mayilvakanapuram.







(ந.லோகதயாளன்)

கிளிநொச்சியில் முன்பள்ளிகளின் பெயர்கள் இராணுவத்தினரின் வரலாற்றில் மாற்றப்படுவதால் மாணவர்களை கற்றல் செயல்பாட்டிற்கு அனுப்ப பெற்றோர்கள் மறுப்புத் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டம், கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கண்ணகிநகர், புன்னை நீராவியிலுள்ள 'பாற்கடற் பூங்கா முன்பள்ளியின்' பெயர் கடந்த 2022.08.03 ஆம் திகதியும், அதே பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மயில்வாகனபுரம் கிராமத்தில் அமைந்துள்ள 'மயூரன் முன்பள்ளியின்' பெயர் 2022.08.05ஆம் திகதியும் இராணுவத்தலையீட்டின் மூலம் 'வீரமுத்துக்கள் முன்பள்ளி' என மாற்றம் செய்யப்பட்டுள்ளமையை கண்டித்தே கிராம மக்கள் இந்த முடிவை அறிவித்துள்ளனர்.

இந்த செயற்பாடு மாவட்டக் கல்விநிலையின் சுயாதீன இயங்கு நிலையை கேள்விக்கு உட்படுத்தியுள்ளதுடன் மேற்படி இரு முன்பள்ளிகளும் அந்தப் பிரதேச மக்களால் தற்போது மூடப்பட்டுள்ளதுடன் சிவில் பாதுகாப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோரது கவனத்திற்கும் கொண்டு சென்றுள்ளனர்.

இதனையடுத்து இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவிற்கு அவசரக் கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் –

2009 இறுதி யுத்தத்துக்குப் பிற்பாடு 2010ஆம் ஆண்டளவில் மீள்குடியேற்றம் நடைபெற்றபோது கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் கல்வித் திணைக்களங்களின் மேற்பார்வையில் நடத்தப்பட்டு வந்த பல முன்பள்ளிகள் இராணுவத்தினரின் சிவில் பாதுகாப்பு படைப்பிரிவினரால் வலுக்கட்டாயமாக கையகப்படுத்தப்பட்டு அங்கு கற்பிக்கின்ற முன்பள்ளி ஆசிரியர்களும் சிவில் பாதுகாப்பு பிரிவின் நிர்வாக ஆளுகையின் கீழ் கொண்டுவரப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தில் 303 பேர், முல்லைத்தீவு மாவட்டத்தில் 166 பேர், யாழ்ப்பாண மாவட்டத்தில் 12 பேர் உட்பட 481 முன்பள்ளி ஆசிரியர்கள் இராணுவப் படையணிச் சம்பளத்தைப் பெற்று கடமையாற்றும் சூழல் வலிந்து உருவாக்கப்பட்டது. அவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் அதே சம்பளத்தை மாகாண கல்வி அமைச்சினூடாக வழங்கி முன்பள்ளிகளின் கல்வித் தரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நாடாளுமன்றத்திலும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களிலும் பலதடவைகள் என்னால் வலியுறுத்தப்பட்ட போதும் உரிய தரப்பினர் இதுவரை எந்த முனைப்பும் மேற்கொள்ளவில்லை.

குறிப்பாக உலக வரலாற்றில் எங்குமே இல்லாத வகையில் ஆரம்பக் கல்வியையே இராணுவமயப்படுத்தி உலகச் சிறுவர் உரிமைச் சட்டங்களை மீறி, பச்சிளம் சிறுவர்களின் அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் வகையில் இராணுவமயப்படுத்தப்பட்ட கல்வி முறையை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அதிலும் குறிப்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் திணிக்க முற்படுகின்றமையானது இன ஒடுக்கு முறையின் இன்னொரு வடிவமாகவே தென்படுகிறது.

வடக்கு, கிழக்கிலுள்ள ஒவ்வொரு முன்பள்ளிகளுக்கும், அந்தந்த முன்பள்ளிகள் அமைந்துள்ள கிராமங்களிலுள்ள மக்கள் சமூகத்தின் பண்பாடு, கலாசார, மொழி, நில, வரலாற்று அடையாளங்களின் பிரதிபலிப்பாகவே தனித்துவம் மிக்கதான தனித்தனிப் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. அந்த முன்பள்ளிகளின் பெயர்கள் குறிப்பிட்டதோர் மக்கள் குழுமத்தின் உணர்வுகளோடு இரண்டறக்கலந்த அடையாளங்களாகவே பார்க்கப்பட்டு வருகின்றன. இந் நிலையில், குறித்த முன்பள்ளிகளின் பொறுப்பாசிரியர்கள், முன்பள்ளி முகாமைத்துவக் குழு, பெற்றோர்கள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் சமூகமட்ட அமைப்புக்களின் ஒப்புதலற்று இராணுவத் தலையீட்டினால், பலவந்தமாக ஒரு முன்பள்ளியின் பெயரை வலிந்து மாற்றம் செய்து, இராணுவத் துணைப் பிரிவொன்றின் சின்னம் பொறிக்கப்பட்ட பெயர்ப் பலகையை காட்சிப்படுத்துவதென்பது எமது மாவட்டத்தின் கல்வித்துறையில் செல்வாக்குச் செலுத்தும் இராணுவ எதேச்சதிகாரத்தனத்தின் வெளிப்பாடே ஆகும்.

ஓர் இனத்தின் அடிப்படை மூலாதாரமான கல்வி உரிமையைப் பறிப்பதனூடாக அந்த இனக்குழுமத்தின் அடையாளம் அழிக்கப்படும் என்பதை அறிந்து, அவ்வாறான செயற்பாடுகளைத் தமிழர் தாயகப் பகுதிகளில் அரங்கேற்றி வருகின்றமை தொடர்பாக, தாங்கள் வடக்கு மாகாண ஆளுநர் என்றவகையில் அக்கறை கொள்ளாதிருப்பது பல்வேறு வழிகளிலும் வலிதாங்கி நிற்கும் எமது மக்களை மேலும் வேதனைக்கு உள்ளாக்கியுள்ளது.

அதேவேளை, முன்பள்ளிகளின் சுயாதீன இயங்கு நிலையில் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் அவற்றுக்கு இராணுவப் பெயர்களைச் சூட்டும் நிகழ்ச்சிநிரலை பரவலாக அமுலாக்கம் செய்யும் முனைப்புக்களின் முதற் கட்டமாகவே பாற்கடற் பூங்கா முன்பள்ளி, மயூரன் முன்பள்ளி உட்பட வேறுசில முன்பள்ளிகளுக்கும் இரா ணுவப்பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன என அறிகிறேன்.

தமது கல்வி, அதனூடான வளமான எதிர்காலம் என்னும் அழகிய கனவுகளோடு முதலடி எடுத்துவைக்கும் முன்பள்ளிச் சிறுவர்கள் உளரீதியான தாக்கங்களுக்கும், நெருக்கடிகளுக்கும் உள்ளாகாது தமது கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக, முன்பள்ளிகளின் சுயாதீன இயங்குநிலையில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள இத்தகு செயற்பாடுகளை உடனடியாக நிறுத்துவதன் மூலமே, வடக்கு, கிழக்கு மாகாணங்களின் கல்வித்துறையில் இராணுவத்தலையீட்டை நீக்க முடியும்.

எனவே தயவுசெய்து, அரச நிர்வாக நடைமுறைகளுக்கு அமைய உருவாக்கப்பட்டு, நீண்டகாலமாக இயங்கிவரும் முன்பள்ளிகள், தமக்குரிய தனித்துவமான பெயரோடும் அடையாளத்தோடும் இயங்குவதற்கு ஏதுவாக, சிவில் பாதுகாப்பு பிரிவினரால் புதிதாக காட்சிப்படுத்தப்பட்டுள்ள பெயர்ப்பலகைகளை உடனடியாக அகற்றுவதற்கும், வடக்கு, கிழக்கிலுள்ள முன்பள்ளிகளின் பாரம்பரிய பெயர்களை நீக்கம் செய்து அவற்றுக்கு இராணுவப் பெயர்களைச் சூட்டும் நிகழ்ச்சிநிரலைத் தடுத்து நிறுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளதோடு இதன் பிரதிகளை செயலாளர், கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு மாகாணம்.

அரசாங்க அதிபர், மாவட்ட செயலகம், கிளிநொச்சி

மாகாணக் கல்விப் பணிப்பாளர், மாகாண கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்.

பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், கண்டாவளை.

வலயக்கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வித் திணைக்களம், கிளிநொச்சி வடக்கு.

உதவிக்கல்விப் பணிப்பாளர் –முன்பள்ளி, வலயக்கல்வித் திணைக்களம், கிளிநொச்சி.

வடக்கு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, யாழ்ப்பாணம் ஆகியோருக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

# யாழிலிருந்து கதிர்காமம் நோக்கி சைக்கிள் பயணம்!





யாழ்ப்பாணத்தில் இருந்து கதிர்காமம் நோக்கி இரு இளைஞர்கள் சைக்கிள் பயணத்தை ஆரம்பித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் கோட்டை முனியப்பர் ஆலய முன்றிலில் இருந்து வெள்ளிக்கிழமை காலை தமது பயணத்தை ஆரம்பித்துள்ளனர். யாழ்ப்பாணம் தொல்புரம் பகுதியை சேர்ந்த குகநாதன் நிதுசன் (வயது 24) மற்றும் பாஸ்கரன் சுமித்தன் (வயது 22) ஆகிய இரு இளைஞர்களுமே தமது பயணத்தை ஆரம்பித்துள்ளனர். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் உடல் ஆரோக்கியத்தை பேண சைக்கிள் ஓட்டுவது சிறந்ததாகும். அதனை மக்கள் மத்தியில் விழிப்புணர்வாக ஏற்படுத்தும் நோக்குடனேயே தாம் சைக்கிளில் கதிர்காமம் நோக்கிப் பயணிக்கிறோம் என தெரிவித்துள்ளனர்.






## குட்டிக் கதை ஒன்று படித்துப் பாருங்கள்

# நண்டு, கொக்கைக் கொன்ற கதை



ஒரு குளக்கரை அதன் கரையோரத்தில் கிழக்கொக்கு ஒன்று விசனமுடன் ஒற்றைக் காலில் நின்று கொண்டிருந்தது.

துள்ளிக் கொண்டிருந்த மீன்களில் ஒன்றுக்கு சந்தேகம் வந்தது. நம்மைச் சும்மாவிடாதே, ஆனால் செயலற்று நின்றுள்ளதே என்னவாக இருக்கும் என்று. நமக்கேன் என்று இராமல் அதன்முன் வந்தது. என்ன கொக்காரே! உன் ஆகாரத்தைக் கொத்தாமல் சும்மா நிற்கிறீர்? என்றது.

நான் மீனைக்கொத்தித் தின்பவன்தான், ஆனாலும் இன்று எனக்கு மனசு சரி இல்லை என்றது கொக்கு.

'மனசு சரி இல்லையா. ஏன்?' என்றது மீன்.

அதைஏன் கேட்கிறாய். என்று பிஷகு பண்ணியது கொக்கு.

பரவாயில்லை சொல்லுங்களேன்.

சொன்னால் உனக்குத் திக் என்றாகும்.

மீனுக்குப் பரபரத்தது.சொன்னால்தானே தெரியும்.

வற்புறுத்திக் கேட்பதாலே சொல்கிறேன். இப்போது ஒரு செம்படவன் இங்கே வரப்போறான். என்று இழுத்தது கொக்கு.

வரட்டுமே

என்ன வரட்டுமே? உங்களையெல்லாம் ஒட்டு மொத்தமாகப் பிடித்துச் சென்றுவிடப் போகிறான்.

அய்யய்யோ!

உடனே அம்மீன் உள்ளே சென்றுவிட்டது.

சில நிமிடங்கள் ஆகி இருக்கும், பல மீன்கள் அதன் முன் துள்ளின.

அதுமட்டுமா! ஒட்டுமொத்தமாக நீயே எங்களையெல்லாம் அந்த அபாயத்திலிருந்து காப்பாற்றேன் என்று கெஞ்சின. அபாயம் சொன்னவனே உபாயமும் சொல்வான் என்று அவைகள் யோசித்து கொக்கிடம் உதவி கேட்டன.

நான் என்ன செய்வேன்? என்னால் செம்படவனோடு சண்டை போடா முடியாது. கிழவன் நான். வேண்டுமென்றால் உங்களை இக்குளத்திலிருந்து வேறொரு குளத்துக்குக் கொண்டு போகலாம். அதனால் எனக்கும் இந்தத் தள்ளாத வயதில் பரோபகாரி என்ற பெயரும் வரும் நீங்களும் பிழைத்திருப்பீர்கள் என்றது கொக்கு மிகவும் இரக்கம் கசிய.

மீன்கள் எல்லாம் தம் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள அதன் பேச்சை நம்பின.

அபாயத்தை அறிந்து சொன்ன நீங்களே உபாயத்தையும் தெரிந்து சொல்கிறீர்கள், அப்படியே செய்யுங்கள் என்றன ஒருமித்தக் குரலில்.

கொக்குக்கும் கசக்குமா காரியம்?

நடைக்கு ஒவ்வொன்றாக குளத்திலிருந்த மீன்களையெல்லாம் கௌவிக் கொண்டுபோய் சில மீன்களைத் தின்று, மற்ற மீன்களை ஒரு பாறையில் உலர வைத்தது.

குளத்திலிருந்த நண்டு ஒன்று இதை கவனித்தது. அதற்கும் வேறு குளத்திற்குச் செல்ல உள்ளுக்குள் ஆசை சுரந்தது.

ஓ சீவகாருண்யனே! என்னையும் அவ்விடத்திற்குக் கொண்டுபோங்கள் என்று கெஞ்சியது.

வருங்காலத்தில் எதுவும் வலிய வரும் – என்று உள்ளுக்குள் துள்ளிக் கொண்ட கொக்கு, நண்டையும் கௌவிக்கொண்டு பறந்தது.

பறக்கும் பொது வழியில் மீன்களின் முள்ளுடல்கள் ஆங்காங்கே சிதறி இருப்பதைக் கண்டது நண்டு.

அதற்கு பக்கென்றது. அத்துடன் வேறு நீர்நிலைக்குக் கொண்டுச் செல்வதாகக் கூறி மீன்களைத் தின்றுவிடும் கொக்கின் வஞ்சகம் நண்டுக்குச் சட்டென்று புரிந்துவிட்டது. தன் நிலையும் அப்படித்தானா?

உயிராசையால் நண்டுக்கு ஒரு உபாயம் தோன்றியது. வைரத்தை வைரத்தால் அறுப்பதுபோல் அதற்கு மூளை வேலை செய்தது.

கொக்காரே! நீங்கள் என்மேல் இரக்கப்பட்டு எடுத்துக் கொண்டு வந்தீர்கள். அங்கே என் உறவினர்கள் பலர் இருப்பதால், என்னை மீண்டும் அங்கே கொண்டு சென்றால் அவைகளையும் காண்பிப்பேன் என்றது நண்டு.

அப்படியா? இன்னும் இருக்கின்றவா நண்டுகள்?

எனக்கு உறவினர்கள் அதிகம் பல இருக்கின்றன.

ஆஹா! அதிர்ஷ்டம் என்றால் இப்படித்தான் வரவேண்டும் நம்பாடு யோகம்தான் என்று மகிழ்ந்த கொக்கு மீண்டும் நண்டைக் கௌவிக் கொன்று பழைய குளத்தை நோக்கிப் பறந்தது.

குளத்துக்கு நேராக வரும்போது அதுவரை மண்டு போலிருந்த நண்டு தன் கொடுக்கினால் கொக்கின் கழுத்தை இரண்டு துண்டாக்கிவிட்டு குளத்து நீரில் விழுந்து உயிர் பிழைத்துக் கொண்டது.

அபாயம் சொன்னவனிடமே உபாயம் கேட்ட மீன்கள் செத்தன.

வஞ்சமனத்தானின் உபாயமும் அபயாமே என்றறிந்து கொன்றுவிட்ட நண்டு பிழைத்தது.

# விஞ்ஞானிகளும் கண்டுபிடிப்புகளும்

**மேரி க்யூரி** (Marie Curie போலந்து மொழி: Maria SkBodowska - Curie நவம்பர் 7 1867 – ஜூலை 4 1934) புகழ்பெற்ற போலந்து மற்றும் பிரஞ்சு வேதியியல் அறிஞர் ஆவார். ரேடியம் பொலோனியம் போன்ற கதிர்வீச்சு மூலகங்களைக் கண்டுபிடித்தார்.

1914இல் முதலாம் உலகப் போரின் போது அம்புலன்ஸ் வண்டிகளில் எக்ஸ் கதிர் கருவிகளைப்பொருத்த உதவி செய்தார். 1934 ஜூலை 4 அன்று மேரி கியூரி மரணம் அடைந்தார். கியூரி இறந்து மூன்று மாதங்களின் பின் அவரின் மகளும் மருமகனும் கியூரியின் செயற்கை கதிர் வீச்சு பற்றிய கண்டுபிடிப்பை வெளியிட்டனர்.

**மைக்கேல் பரடே** (Michael Faraday செப்டெம்பர் 22 1791 – ஆகஸ்டு 25 1867) பிரித்தானியாவைச் சேர்ந்த ஒரு வேதியியலாளரும் இயற்பியலாளரும் ஆவார். இவர் மின்காந்தவியல் மின்வேதியியல் ஆகிய துறைகளுக்குக் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளைச் செய்துள்ளார். புவி மையக் கோட்பாட்டுக்கு மாறாக இவர் முன்வைத்த சூரிய மையக் கோட்பாடு மனிதனால் கண்டுபிடிக்கப்பட்டவற்றுள் மிக முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகின்றது. இக் கண்டுபிடிப்பே நவீன வானியலின் அடிப்படையாகும்.

**பியேர் ஜூல்ஸ் சேசர் ஜான்சென்** (Pierre Jules Csar Janssen பெப்ரவரி 22 1824 – டிசெம்பர் 23 1907) என்பவர் ஒரு பிரெஞ்சு வானியலாளர் ஆவார். இவர் ஆங்கிலேய அறிவியலாளர் ஜோசப் நோர்மன் லொக்கியர் என்பவருடன் இணைந்து ஹீலியம் வாயுவைக் கண்டுபிடித்தார்.

## பச்சைக் கிளியே வா வா



பச்சைக் கிளியே வா வா!
பாலும் சோறும் உண்ண வா!
கொச்சி மஞ்சள் பூச வா!
கொஞ்சி விளையாட வா!
பைய பைய பறந்து வா!
பாடி பாடிக் களித்து வா!
கையில் வந்து இருக்க வா!
கனியருந்த ஓடி வா!

# RADIANT DAWN

A Sunday Supplement in English to Kalaikkathir

Page I English for all Sunday the 07th of August 2022


**We welcome students' articles in word for publication**

-Editor-

kalaikkathiredu@gmail.com



# The Golden Girl

Ever since she burst into the scene by making it to the 1980 Moscow Olympics as a 16 – year old, P. T. Usha's tall deeds have exemplified Indian sporting excellence. The spirit queen was so consistent for over a decade that she was truly the flag bearer who helped countrymen live the dream of a rare sporting excellence in the international arena.

Hailing from a remote village called Payyoli, Usha became an icon for sport lovers.

She made the nation swell with pride, every time she stepped on to the track. She gave unalloyed joy to her fAnswer: when she became the first Indian woman to make it to Olympic final.

Usha's greatest moment was also the most shattering in her life as she was pushed to the fourth place in the 400 meters hurdles final at the 1984 Los Angeles Olympics. The Romanian Christina Cojocaru won the bronze medal. Usha lost by an agonising l/100th of a second. But every Indian household acknowledge the sense of achievement, though it fell short of India's first Olympic medal from the track. Several girls born during the 1980s were named after the golden girl. It served as an eloquent testimony to the love and affection many people had for Usha.

Usha's reign as the Asian sprint queen was highlighted by her snapping up five gold medals and a bronze at the 1985 Jakarta Asian track and field meet followed by a sensational four gold medals and one silver haul at the Seoul Asian Games the following year.

***1. Answer the following questions.***

a. When did Usha capture the imagination of the entire nation?

______________________________________________

______________________________________________

b. How did she hefp her countrymen five the dream of a rare sporting excellence?

______________________________________________

______________________________________________

c. Why were many girls in the mid 80s named after Usha?

______________________________________________

______________________________________________

d. What was the most shattering moment in the life of Usha?

______________________________________________

______________________________________________

2. Write the main events that happened in Usha's life in the following years.


1980 ______________________________

1984 ______________________________

1985 ______________________________

1986 ______________________________

# "A LITTLE PRINCESS" - by Frances Hodgson Burnett



Once on a dark winter's day, when the yellow fog hung so thick and heavy in the streets of London that the lamps were lighted and the shop windows blazed with gas as they do at night, an odd-looking little girl sat in a cab with her father and was driven rather slowly through the big thoroughfares.

She sat with her feet tucked under her, and leaned against her father, who held her in his arm, as she stared out of the window at the passing people with a queer oldfashioned thoughtfulness in her big eyes.

She was such a little girl that one did not expect to see such a look on her small face. It would have been an old look for a child of twelve, and Sara Crewe was only seven. The fact was, however, that she was always dreaming and thinking odd things and could not herself remember any time when she had not been thinking things about grown-up people and the world they belonged to. She felt as if she had lived a long, long time.

At this moment she was remembering the voyage she had just made from Bombay with her father, Captain Crewe. She was thinking of the big ship, of the Lascars passing silently to and fro on it, of the children playing about on the hot deck, and of some young officers' wives who used to try to make her talk to them and laugh at the things she said.

Principally, she was thinking of what a queer thing it was that at one time one was in India in the blazing sun, and then in the middle of the ocean, and then driving in a strange vehicle through strange streets where the day was as dark as the night.

She found this so puzzling that she moved closer to her father. "Papa," she said in a low, mysterious little voice which was almost a whisper, "papa." "What is it, darling?" Captain Crewe answered, holding her closer and looking down into her face. "What is Sara thinking of?" "Is this the place?" Sara whispered, cuddling still closer to him. "Is it, papa?" "Yes, little Sara, it is. We have reached it at last." And though she was only seven years old, she knew that he felt sad when he said it.

**1. Sara most likely moved close to her father because she**

A. was overwhelmed by the things she was seeing.

B. feared that the people would attack her.

C. was cold from the damp London air.

D. wanted him to tell her where they were going.

**2. In paragraph 1, the word thoroughfares means**

A. cabs.

B. cities.

C. streets.

D. lamps.

**3. Which of the following BEST describes how Sara felt at the end of the passage?**

A. weary

B. worried

C. confused

D. excited

**4. Why do you think Captain Crewe was sad?**

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

**Never stop learning and develop yourself - Albert Einstein**

# Rosa Parks



## Refused to give up her bus seat in 1955

Rosa Parks (1913—2005) helped initiate the civil rights movement in the United States when she refused to give up her seat to a white man on a Montgomery, Alabama bus in 1955. Her actions inspired the leaders of the local Black community to organize the Montgomery Bus Boycott. Led by a young Rev. Dr. Martin Luther King Jr., the boycott lasted more than a year—during which Parks not coincidentally lost her job—and ended only when the U.S. Supreme Court ruled that bus segregation was unconstitutional. Over the next half-century, Parks became a nationally recognized symbol of dignity and strength in the struggle to end entrenched racial segregation.

Rosa Parks' Early Life

Rosa Louise McCauley was born in Tuskegee, Alabama, on February 4, 1913. She moved with her parents, James and Leona McCauley, to Pine Level, Alabama, at age 2 to reside with Leona's parents. Her brother, Sylvester, was born in 1915, and shortly after that her parents separated.

Did you know? When Rosa Parks refused to give up her bus seat in 1955, it wasn't the first time she'd clashed with driver James Blake. Parks stepped onto his very crowded bus on a chilly day 12 years earlier, paid her fare at the front, then resisted the rule in place for Black people to disembark and re-enter through the back door. She stood her ground until Blake pulled her coat sleeve, enraged, to demand her cooperation. Parks left the bus rather than give in.

Rosa's mother was a teacher, and the family valued education. Rosa moved to Montgomery, Alabama, at age 11 and eventually attended



high school there, a laboratory school at the Alabama State Teachers' College for Negroes. She left at 16, early in 11th grade, because she needed to care for her dying grandmother and, shortly thereafter, her chronically ill mother. In 1932, at 19, she married Raymond Parks, a self-educated man 10 years her senior who worked as a barber and was a long-time member of the National Association for the Advancement of Colored People (NAACP). He supported Rosa in her efforts to earn her high-school diploma, which she ultimately did the following year.

Raymond and Rosa, who worked as a seamstress, became respected members of Montgomery's large African American community. Co-existing with white people in a city governed by "Jim Crow" (segregation) laws, however, was fraught with daily frustrations: Black people could attend only certain (inferior) schools, could drink only from specified water fountains and could borrow books only from the "Black" library, among other restrictions.

Although Raymond had previously discouraged her out of fear for her safety, in December 1943, Rosa also joined the Montgomery chapter of the NAACP and became chapter secretary. She worked closely with chapter president Edgar Daniel (E.D.) Nixon. Nixon was a railroad porter known in the city as an advocate for Black people who wanted to register to vote, and also as president of the local branch of the Brotherhood of Sleeping Car Porters union.

On Thursday, December 1, 1955, the 42-year-old Rosa Parks was commuting home from a long day of work at the Montgomery Fair department store by bus. Black residents of Montgomery often avoided municipal buses if possible because they found the Negroes-in-back policy so demeaning. Nonetheless, 70 percent or more riders on a typical day were Black, and on this day Rosa Parks was one of them.

Segregation was written into law; the front of a Montgomery bus was reserved for white citizens, and the seats behind them for Black citizens. However, it was only by custom that bus drivers had the authority to ask a Black person to give up a seat for a white rider. There were contradictory Montgomery laws on the books: One said segregation must be enforced, but another, largely ignored, said no person (white or Black) could be asked to give up a seat even if there were no other seat on the bus available.

Nonetheless, at one point on the route, a white man had no seat because all the seats in the designated "white" section were taken. So the driver told the riders in the four seats of the first row of the "colored" section to stand, in effect adding another row to the "white" section. The three others obeyed. Parks did not.

Rosa Parks and the Montgomery Bus Boycott

Although Parks used her one phone call to contact her husband, word of her arrest had spread quickly and E.D. Nixon was there when Parks was released on bail later that evening. Nixon had hoped for years to find a courageous Black person of unquestioned honesty and integrity to become the plaintiff in a case that might become the test of the validity of segregation laws. Sitting in Parks' home, Nixon convinced Parks—and her husband and mother—that Parks was that plaintiff. Another idea arose as well: The Black population of Montgomery would boycott the buses on the day of Parks' trial, Monday, December 5. By midnight, 35,000 flyers were being mimeographed to be sent home with Black schoolchildren, informing their parents of the planned boycott.

On December 5, Parks was found guilty of violating segregation laws, given a suspended sentence and fined $10 plus $4 in court costs. Meanwhile, Black participation in the boycott was much larger than even optimists in the community had anticipated. Nixon and some ministers decided to take advantage of the momentum, forming the Montgomery Improvement Association (MIA) to manage the boycott, and they elected Reverend Dr. Martin Luther King Jr.–new to Montgomery and just 26 years old—as the MIA's president.

As appeals and related lawsuits wended their way through the courts, all the way up to the U.S. Supreme Court, the Montgomery Bus Boycott engendered anger in much of Montgomery's white population as well as some violence, and Nixon's and Dr. King's homes were bombed. The violence didn't deter the boycotters or their leaders, however, and the drama in Montgomery continued to gain attention from the national and international press.

On November 13, 1956, the Supreme Court ruled that bus segregation was unconstitutional; the boycott ended December 20, a day after the Court's written order arrived in Montgomery. Parks—who had lost her job and experienced harassment all year—became known as "the mother of the civil rights movement."

Facing continued harassment and threats in the wake of the boycott, Parks, along with her husband and mother, eventually decided to move to Detroit, where Parks' brother resided. Parks became an administrative aide in the Detroit office of Congressman John Conyers Jr. in 1965, a post she held until her 1988 retirement. Her husband, brother and mother all died of cancer between 1977 and 1979. In 1987, she co-founded the Rosa and Raymond Parks Institute for Self-Development, to serve Detroit's youth.

In the years following her retirement, she traveled to lend her support to civil-rights events and causes and wrote an autobiography, "Rosa Parks: My Story." In 1999, Parks was awarded the Congressional Gold Medal, the highest honor the United States bestows on a civilian. (Other recipients have included George Washington, Thomas Edison, Betty Ford and Mother Teresa.) When she died at age 92 on October 24, 2005, she became the first woman in the nation's history to lie in honor at the U.S. Capitol.



# Eighteen community and industry organizations sign MOUs with the Faculty of Business Studies, University of Vavuniya

**This was held on the 27th of June 2022, during the week of the Commemoration of the Silver Jubilee of the Faculty of Business Studies**

The Faculty of Business Studies, University of Vavuniya successfully enters into the 25 years of service excellence from its inception in 1997 to 2022. The vision of the faculty is to be a nationally renowned faculty in business education. The faculty moves forward to produce dynamic leaders to outperform in the challenging business environment through the highest quality of teaching, learning, research and industry and community engagement.

The faculty extends the networking and collaborations with the stakeholders for increasing the shared capacities for well serving the students and community. These MOUs with the eighteen community and industry organizations promotes the pursuance of common interests, in promoting and developing the principles, techniques and practices of Business and Project Management to optimize the utilization of Human Resources at the National and International Level shared by the faculty and community and industry organisations agree to enter into this Memorandum of Understanding to develop mechanisms for collaboration.

This community and industry collaboration is expected to lead to the implementation of internship training and placements for Undergraduates and Graduates. Further, this collaboration promotes jointly organize field/exposure visits, capstone projects, educational programs, seminars, workshops, conferences, research activities, publications and joint community projects of mutual interest.

Especially, the faculty developed a concept of regional Micro, Small, and Medium (MSM) enterprise development by establishing a multistakeholder network with the stakeholders. The faculty establishes a multi-stakeholder facilitation Hub and contribute to the progressive recovery and development of the MSM sector.

These collaborating efforts try to address partially the present economic crisis of the country by developing MSM enterprises in the region. The faculty envisages being a driving force and to work together with all necessary stakeholders to contribute to the quick recovery and development of MSM enterprises and household livelihood ventures. The purpose of this intervention can be said as below:

Speed up the resumption, successful recovery and development of the MSM enterprises and household livelihood ventures through effective management of the recovery phase.

The approach proposed in achieving the purpose is service facilitation and focused knowledge base management. The faculty will be the centre and play the role of a Hub. Service facilitation refers to providing and facilitating access to necessary services for the successful resumption, recovery and development of the MSM enterprises.

Along with the period and progress of the sectors in the region, the requirement and nature of intervention may change with evolving contexts. The service facilitation and focused knowledge-base management will remain the core strategy and will contribute to the advancement of the sectors in the long run.

The University Vice-Chancellor Dr T.Mangaleswaran, The Dean of the Business Studies Faculty, Dr Y.Nanthagopan, Heads of Departments, Academic Staff, Directors and senior officials of the community and industry organizations, senior officials from the government and international organisations participated in the MOU signing event. A stakeholder discussion was taken place followed by the MOUs signing event. A Multistakeholder hub/committee will be created for the purpose of developing the MSM enterprises of the region.

The following community and industry organizations have signed MOUs with the Faculty of Business Studies, University of Vavuniya.

As the Community organizations; Rural Economic and Community Development Organization (RECDO), North and East Economic Development (NEED) Centre, Via Village Entrepreneur's Centre, OfERR (Ceylon), Social Organizations Networking For Development (SOND), Social Economical & Environmental Developers (SEED), Serving Humanity Foundation (SHF), Caritas-Valvuthayam, Voice Area Federation, Social Welfare Organization Ampara District (SWOAD), World Vision Lanka, Organization For Rehabilitation of the Handicapped (ORHAN), Recovery, Humanitarian Action Management Agency (RAHAMA), and PALM Community Development Services Company (Guarantee) Ltd and as the industrial organizations; Innovay Pvt. Ltd, Boralugoda Graphite Pvt Ltd, CAN Construction and Consultancy (Pvt) Ltd, and Omega Line Vavuniya Apparels.

Signing MOUs with Eighteen organizations is a remarkable and golden opportunity gained by the Faculty of Business Studies in






# இலங்கையின் தாழ்நிலப் பொழில்கள்

இலங்கையின் தாழ்நில மழைக் காடுகள் இலங்கைத் தீவின் தென்மேற்குப் பகுதியில் கடல் மட்டத்திலிருந்து 1,000 மீற்றரிலும் குறைந்த உயரத்தில் அமைந்த அயன மண்டல பொழில்களைத் தம்மில் உள்ளடக்குகின்றன.

ஆண்டு முழுவதும் நிலவும் இளஞ்சூட்டு, ஈரலிப்பான காலநிலையும் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்தியத் துணைக் கண்டத்திலிருந்து தனிப்பட்டு இருப்பதும் அப்பகுதிகளில் இலங்கையின் பொழில்களில் மாத்திரமே காணக்கூடியதான பல்வேறு வகையான தாவரங்களும் விலங்குகளும் கூர்ப்படைவதற்கு வழியமைத்தன.

இவற்றின் அடர்ந்த காட்டுப் பகுதி 45 மீற்றரிலும் கூடிய உயரம் வளரக்கூடிய 150 இலும் கூடிய எண்ணிக்கையான மர இனங்களைக் கொண்டமைந்துள்ளன.







இலங்கையின் தாழ்நில பொழில்கள் இலங்கையின் மொத்த நிலப் பரப்பில் 2.14 வீதத்தை உள்ளடக்குகின்றன. இச்சூழற் காட்டுப் பகுதியிலேயே சருகு மான் போன்ற இலங்கைக்கேயுரித்தான விலங்குகள் காணப்படுகின்றன.

உலகில் அதி கூடிய எண்ணிக்கையான ஈருடகவாழி இனங்கள் இலங்கையிலேயே காணப்படுகின்றன. அவ்வாறான ஈருடகவாழிகளில் 250 இற்கும் மேற்பட்ட எண்ணிக்கையான தவளை இனங்கள் இம்பொழில்களிலேயே வாழ்கின்றன.

124,340.8 ஹெக்டேயர் நிலப்பரப்பைக் கொண்டுள்ள தாழ்நில பொழில்கள் இலங்கையின் மொத்தப் பரப்பளவில் 2.14 வீதத்தைக் கொண்டுள்ளன.

கடல் மட்டத்திலிருந்து ஆயிரம் மீற்றர் உயரத்துக்குக் கீழாக அமைந்துள்ள இக்காடுகள் பருவப்பெயர்ச்சி மழை மூலம் ஆண்டுதோறும் 2,500 - 1,800 மில்லிமீற்றர் மழையைப் பெறுகின்றன. இச்சூழற் பகுதியில் உள்ளடங்கும் காடுகளில் கன்னெலிய, விகாரகெலே, நாக்கியாதெனிய மற்றும் சிங்கராஜ ஆகிய காடுகள் அடங்குகின்றன.

அத்துடன் பம்பரபொட்டுவ, மொரபிட்டிய, ருனாகந்த, கிலிமலே மற்றும் எரத்தனே ஆகிய இடங்களிலுள்ள பாதுகாக்கப்பட்ட வனங்களும் இலங்கையின் தாழ்நில பொழில்களில் அடங்குகின்றன.

ஆண்டு முழுவதும் கிடைக்கும் மழை வீழ்ச்சியும் மாறாத வெப்பநிலையும் வளமான உயிர்ப்பல்வகைமையைப் பேணுகின்றன. இம்பொழில்கள் இப்பகுதி ஆறுகளுக்கான முக்கிய நீர் தாங்கு பகுதிகளாகவும் காணப்படுகின்றன.

## இலங்கையின் தாவரங்கள்

இலங்கை தாவர அமைவில் நில அமைவிடம் மண்ணின் தன்மை என்பவற்றுடன் சேர்த்து காலநிலை பெரும் பங்கு வகிக்கிறது.

இலங்கையின் தாழ்நில பொழில்களில் இரண்டு வகையான பூக்கும் தாவரங்கள் பெரும்பாலாகக் காணப்படுகின்றன. அவை சிங்கள மொழியில் ஹொர என அழைக்கப்படும் இருசிறகி தாவரங்களும் நெதுன் தாவரங்களுமாகும்.

இவ்விரு வகையும் பொருளாதார ரீதியிலும் மிக முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. இலங்கையின் தேசிய மரமான நாகமரம் மேற்படி நெதுன் வகை சார்ந்த மரமாகும். இச்சூழற் பகுதியின் காடுகள் நான்கு வகையான தாவரவியல் பகுதிகளைக் கொண்டுள்ளன. முக்கிய பகுதித் தாவரங்கள் 30 - 40 மீற்றர் உயரமாகவும், அடுத்த பகுதித் தாவரங்கள் 15 - 30 மீற்றர் உயரமாகவும், கீழ்ப் பகுதித் தாவரங்கள் 5 - 15 மீற்றர் உயரமாகவும் நான்காவது பகுதி புதராகவும் காணப்படுகின்றன.

மேல் நிலைத் தாவரங்கள் 45 மீற்றரிலும் கூடிய உயரமுள்ளனவாகும். இப்பகுதியில் பல்வேறு வகையான கண்டல் தாவரங்களும் காணப்படுகின்றன.



## கல்விக்கதிர்

- அகரன் -

## உயிர்ப்பல்வகைமை தன்மை

இலங்கைக்கேயுரித்தான தாவரங்கள் மற்றும் விலங்குகளில் கிட்டத்தட்ட அனைத்தும் இலங்கையின் தென்மேற்கு பொழில்களில் காணப்படுகின்றன.



இளஞ்சூட்டு மற்றும் ஈரப்பதன் மிக்க இப்பொழில்கள் பௌதிக ரீதியாக பல்லாயிரம் ஆண்டுகள் வேறுபட்டிருந்தமையினால் விசேடமான இனங்கள் ஏராளமாக உருவாவதற்கு வழியேற்பட்டுள்ளது. இலங்கைக்கேயுரித்தான 360 க்கும் மேற்பட்ட தாவர இனங்களில் 60 வீதத்துக்கும் மேற்பட்டவை இச்சூழற் பகுதியில் மாத்திரமே காணப்படுகின்றன.

இவையன்றி, இலங்கைக்கேயுரித்தான தாவர இனங்களில் 61 இனங்கள் இந்தத் தாழ்நில பொழில்களிலும் இலங்கையின் மலைசார் பொழில்கள் மற்றும் இலங்கையின் உலர் வலய என்றும் பசுமையான காடுகள் என்பவற்றில் விரவிக் காணப்படுகின்றன. ஆசிய பொழில்களில் பெரும்பான்மையாகக் காணப்படும் இருசிறகி தாவரங்களில் தனித் தன்மையான பலவும் இலங்கையின் தாழ்நில பொழில்களில் காணப்படுகின்றன.

இலங்கைக்கேயுரித்தான இருசிறகித் தாவர இனங்கள் 58 இலும் ஒரேயொரு இனத்தைத் தவிர ஏனைய அனைத்தும் இம்பொழில்களில் மாத்திரமே காணப்படுகின்றன. இலங்கையின் தாழ்நில பொழில்களும் ஓரளவிலான மலைசார் பொழில்களும் தெற்காசியாவின் எந்தப் பகுதியையும் விட பூக்குமினங்களின் கூடுதலான வகைகளைக் கொண்டுள்ளன.

## நேர்காணல்

## சொல்லிசைக் கலைஞன் CV லக்ஸ் உடனான நேர்காணல்.

# "உங்கள் தேடல் விரிவானால் உங்களுக்குள் புதிதாக ஒன்று உருவாகும்."



நேர்கண்டவர் - திருமலை தட்சா

**01) உங்களைப் பற்றிய சிறு அறிமுகம்?**

திருகோணமலை எனது சொந்த இடம். தி/உவர் மலை விவேகானந்தா கல்லூரியில் சிறுவயது தொடக்கம் உயர்தரம் வரை கல்வி கற்றிருந்தேன். லக்ஸ்மன் எனது இயற்பெயர் சிவி லக்ஸ்(CV Laksh) என்று சகலராலும் இந்த இசைப்பயணத்தில் அறியப்படுகிறேன் இந்த இசைத் துறையில் 2009 ஆம் ஆண்டு தொடக்கம் பாடலாசிரியராகவும், சொல்லிசைப் பாடகனாகவும் 2018 முதல் இசையமைப்பாளராகவும் உள்ளேன்.

**02) சொல்லிசைத் துறையில் உங்களுக்கு ஏற்பட்ட ஆர்வம் பற்றியும், அதன் பயணம் குறித்தும்?**

சிறுவயதில் இருந்தே தாயக கவிதைகள் மேல் ஒரு ஈர்ப்பு இருந்தது. எழுத வேண்டும் என்று ஒரு ஆர்வம் இருந்தது. நிறைய புத்தகங்கள் படிப்பேன். அதாவது உயர்தரம் படித்துக் கொண்டிருந்த போது கவிதைகளை எழுதத் தொடங்கினேன். அதிகமாக மண் மற்றும் மக்கள் பற்றியும் எழுதினேன். ஆனாலும் பத்திரிகைகளுக்கு அனுப்பும் போது அதில் ஏற்பட்ட திருப்தி என்னுடைய கவிதைகளுக்கு எவ்வாறான ரசனைகள் அமைகின்றது என்பது பற்றிய திருப்தி போதாமலிருந்தது. என்னுடைய எழுத்துக்கள் இன்னும் நிறைய வாசகர்களை மட்டுமல்லாது உலகம் பூராக சென்றடைய வேண்டும் என்று ஆசைப்பட்டேன். அதற்காக நான் தேர்ந்தெடுத்த துறை தான் சொல்லிசை, இந்த இசை முறை எப்போதுமே ஒரு கவிதையும், இசையும் ஒரு சந்தத்துடன் சேர்வதாகத்தான் அமைகின்றது. அதனால் என்னுடைய கவிதைகளை இசையுடன் சேர்த்து சொல்லிசையாக படைக்க முயன்றேன். 2009ஆம் ஆண்டு காலப்பகுதியில் சொல்லிசைப் பாடல்கள் இந்த தலைமுறைக்குள் வெகுவாக கவரப்படக் கூடிய ஒரு காலமாக இருந்தது. எங்களுக்கென்று ஓர் அடையாளம் வேண்டும், எப்போதுமே ஒரு அடையாளம் வேண்டும், வாழ்ந்த வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம் வேண்டும் என்பதற்காக நான் சொல்லிசை கலைஞனாக பரிணாமம் பெற்றிருந்தேன்.

**03) தற்சமயம் இத்துறையில் பலரும் தங்களது திறமைகளை வெளிக்கொண்டு வரும் நிலையில், உங்களுக்கான மேடை வாய்ப்பு சந்தர்ப்பங்கள் எவ்வாறு உள்ளன?**

ஆரம்பத்தில் திருகோணமலையிலேயே சில இடங்களில் அதாவது என்னுடைய சொந்த ஊரிலே பல மேடைகளில் வேறு நிகழ்வுகள் நடைபெறும் பொழுது எனக்கான வாய்ப்புகள் கிடைக்கவில்லை. எல்லாவற்றிற்குமே ஒரு அங்கீகாரம் எதிர்பார்த்தார்கள். இதற்காகவே நானும் எனது நண்பர்களும் ஒரு குழுவாக இணைந்து 2011 இல் (அகிலன், கங்காதரன், விஷ்ணு, மனோராந்தன், பவன் இவர்கள் அனைவரும் பாடசாலையில் எனது வகுப்பு நண்பர்கள்) ஒரு கலை குழுவொன்றை ஆரம்பித்து அதன் மூலம் குறும்படம் மற்றும் பாடல்களை உருவாக்கி நாங்களே மேடை நிகழ்ச்சிகளையும் நடாத்தியிருந்தோம். அதன் பிற்பாடு மெல்ல மெல்லமாக என்னை ஒரு கலைஞனாக ஊடகங்கள் வாயிலாகவும், என்னுடைய பாடல்களும் பிரபல்யமாகத் தொடங்க மேடை வாய்ப்புகளும் கிடைக்கத் தொடங்கின . இப்பொழுது வரைக்கும் இலங்கையில் உள்ள சகல இடங்களுக்கும் சென்று மேடை நிகழ்ச்சிகளை செய்து இருக்கின்றேன். அத்துடன் இந்தியாவிலும் 2016ஆம் ஆண்டில் கல்லூரி மேடை ஒன்றில் எனது பாடல்களை பாடினேன் . 2019 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியின் பின்னர் (கொரோனா காலப்பகுதியில்) மேடை வாய்ப்புக்கள் இங்கு அமையப்பெறவில்லை. அதற்குப் பிறகு மீண்டும் இப்பொழுது நான் பொருளாதார வருவாய்க்காக நோக்கத்துடன் மேடை நிகழ்ச்சிகளை செய்து வருகின்றேன்.

**04) 10 வருடங்களுக்கு மேலாக சொல்லிசைத் துறையில் பயணித்துக் கொண்டு வரும் வேளையில், இத்துறையின் தற்காலப் போக்கும், வளர்ச்சியும் எவ்வாறு உள்ளது?**

நிச்சயமாக இலங்கையின் சுயாதீன தமிழ் இசைத் துறை தற்பொழுது பல கலைஞர்களை கண்டு கொண்டிருக்கிறது. 2009ஆம் ஆண்டு காலப்பகுதியில் நமது இசைப் பயணத்தை ஆரம்பிக்கும் பொழுது விரல் விட்டு எண்ணக்கூடிய கலைஞர்களே இருந்தனர். அதற்கு முன்னர் இருந்த கலைஞர்களும் இடையிலேயே தமது இசைப் பயணத்தை விட்டு விட்டனர். அவர்கள் இசைத்துறையை விட்டு விலகுவதற்கான காரணத்தைப் பார்தோமென்றால் இலங்கையை பொறுத்தவரையில் பொருளாதார ரீதியிலான முன்னேற்றம் இல்லாத காரணத்தினால் தான். இசைத்துறையைப் பாதியில் விட்டுவிட்டு வேறு தொழில்களை நாடி செல்கின்றனர். நிறையக் கலைஞர்கள் திறமை இருந்தும் வறுமை காரணமாகவே தமது திறமையில் நீடித்து நிலைக்க முடியாமல் இடையில் விட்டுச் சென்று விட்டனர். இப்பொழுது சமூக வலைத்தளங்களின் ஊடாக ஒரு படைப்பு ஆகச் சிறந்ததாக அமையும் பொழுது அதாவது அதிகளவிலான பார்வையாளர்களை பெறுகையில் அந்த வலைத்தளங்களின் ஊடாகவே வருமானத்தை ஈட்டிக் கொள்ளக்கூடிய வழிவகைகள் காணப்படுகின்றது. இப்பொழுது spotify youtube மூலமாக இப்பொழுது உள்ள கலைஞர்கள் தமது வருமானத்தை ஈட்டிக் கொள்கின்றனர். அதன் காரணமாக இப்பொழுது அதிகளவிலான இளம் கலைஞர்களை காணக்கூடியதாக உள்ளது. இன்னும் இலங்கையை பொறுத்த வரையில் தயாரிப்பு நிறுவனங்கள் தாமாகவே முன் வந்து கலைஞர்களுடையே படைப்புக்களை வாங்க வேண்டும். அவ்வாறு நடக்கும் பொழுது இன்னும் பல கலைஞர்கள் இத் துறையில் உள்வாங்கப்படு வார்கள் என்பது என்னுடைய கருத்து.

**05) இசைத்துறையில் இதுவரையில் வெளியாகிய படைப்புகள் குறித்து?**

2009ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையில் கிட்டத்தட்ட 80 பாடல்களுக்கு மேல் வெளியீடு செய்திருக்கிறேன். நிறைய பாடல்கள் இன்னும் செய்து வெளியீடு செய்ய முடியாமல் இருக்கின்றன. 2018ஆம் ஆண்டில் சிலம்பு என்கின்ற இசைத்தொகுப்பு ஆல்பம் ஒன்றை வெளியிட்டிருந்தேன். பாடல்களாக கிட்டத்தட்ட 45ற்கும் மேற் பட்ட பாடல்களை செய்திருக்கிறேன். இன்னும் பல படைப்புகள் நிலுவையில் இருக்கின்றன. அவற்றுக்கான வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. எழுதப்பட்டு பாடல் உருவாக்கத்திற்காக மட்டும் 60 பாடல் வரிகள் வைத்திருந்தேன். ஆனால் எதிர்பாராதவிதமாக 2021இல் எனது கலையகத்தில் நடந்த அசம்பாவிதத்தால் அவை அழிந்து விட்டன . வெளியான பாடல்களை எல்லாவற்றையும் Cv laksh YouTube இணையத்தளத்தில் பார்வையிட முடியும். அதேநேரம் தற்பொழுது சர்வதேச அளவில் நாங்கள் பாடல்களை செவிமடுக்கக் கூடிய spotify itunes போன்ற முன்னேற்றகரமான தொலைபேசி செயலிகளில் என்னுடைய பாடல்கள் இருக்கின்றன.

**06) திருகோணமலை மாவட்டத்தில் சொல்லிசைத் துறையின் பார்வையும், அத்துறைக் கலைஞர்களுக்கான வரவேற்பும் எவ்வாறு உள்ளது?**

திருகோணமலையில் விரல் விட்டு எண்ணக் கூடியளவிலான மிகக்குறைவான சொல்லிசைப் பாடல்களை படைப்பவர்களைத் தான் இப்பொழுது காணக் கூடியதாக உள்ளது. நிறையக் கலைஞர்கள் உருவாகிறார்கள். ஒன்றிரண்டு பாடல்களுக்குப் பின்னர் அவர்களை காணக் கிடைப்பதேயில்லை. அதற்கான காரணம் நான் ஏற்கனவே கூறியது போல் பொருளாதார ரீதியிலான தாக்கங்களே செல்வாக்கு செலுத்துகின்றன. முதலாவது பாடலை செய்வதற்கான செலவீனங்கள் பாடலில் பெரியளவான தாக்கத்தை ஏற்படுத்தாது.



அதற்கு அடுத்ததாக பாடல்களை தொடங்கும் பொழுது தான் அதற்கான செலவீனங்களை ஏற்றுக் கொள்வது கடினமானதாக இருக்கும். அத்துடன் காலத்திற்கு காலம் தொழில்நுட்பங்களும் மாறிக் கொண்டு போகும். அந்தத் தொழில்நுட்பங்களை நாங்கள் பெற்றுக் கொள்வதிலும் கடினத்தன்மை காணப்படுகின்றது. இலங்கையை பொறுத்தவரையில் இப்பொழுது இருக்கும் காலப்பகுதி சர்வதேச நாணயத்தின் பெறுமானம் கூடிச் செல்லும் போக்கு காரணமாக எங்களுக்கு புதிய தொழில்நுட்பங்களை பெற்றுக் கொள்வதில் எல்லாம் மிகுந்த செலவுகள் உள்ளதாலும் நிறைய கலைஞர்கள் பின்வாங்குகின்றார்கள். திருகோணமலையைப் பொறுத்தவரையில் இளம் கலைஞர்கள் அதாவது வளர்ந்து வரும் கலைஞர்களுக்கு அல்லது திறமை இருந்தும் வாய்ப்பு கிடைக்காத கலைஞர்களுக்கு எப்பொழுதும் நான் கை கொடுப்பதற்கு தயாராக இருக்கின்றேன். நிறையத் தடவைகள் நான் முயற்சி செய்திருக்கின்றேன். அவர்களை என்னுடன் இணைத்து பாடல்களை செய்வதற்கு உண்மையிலேயே அவ்வாறு யாராவது இருப்பார்களெனின் இசைத்துறையில் அனுபவம் இல்லாது விட்டாலும் பரவாயில்லை ஆர்வம் இருந்து எதையாவது சாதிக்க வேண்டும் என்று நினைக்கின்ற இளைஞர்கள் என்னுடன் கைகோர்க்கலாம்.

**07) இசைத்துறையில் உங்களுடன் இணைந்து பணியாற்றுபவர்கள் குறித்து?**

இசைத் துறையில் கிட்டத்தட்ட 2009 இலிருந்து ஆரம்பத்தில் இருந்த நண்பர்கள் தொழில் ரீதியாக வேறு தொழில்களுக்கு சென்றதன் பிற்பாடு எனக்கு புதிய அறிமுகங்களை நாடிச்செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டது. அத்துடன் நிறையவே புதிய அறிமுகங்கள் கிடைத்தன. அதாவது இசைத் துறையுடன் சம்பந்தப்பட்டவர்கள் முக்கியமாகக் கூற வேண்டியவர்கள் - அதாவது என்னை ஒருபடிக்கு மேலே உயர்த்திச் சென்றவர் கிரிஷான் மகேசன் அண்ணா அதாவது இவர் எமது நாட்டின் மூத்த கலைஞர் ஒருவர். ஆகவே அவரை நிச்சயமாக குறிப்பிட வேண்டும். அதன்பிறகு திருகோணமலையைச் சேர்ந்த மூத்த கலைஞர் மொஹம்மத் சமீல் அண்ணா என்னுடைய பல பாடல்களுக்கான ஒலிக்கலவையை அவர்தான் செய்கிறார். அதே நேரம் என்னுடைய பாடல்களில் 2014 ஆம் ஆண்டிலிருந்தே இதுவரைக்கும் அதாவது நல்ல ஒரு உறவுடன் என்னுடைய வேலைகளை செய்து தருகிறார் தினேஷ் அண்ணா மட்டக்களப்பைச் சேர்ந்தவர். அவரும் ஒரு ஒலிக்கலவை பொறியியலாளர். ஒவ்வொரு படைப்பிலும் ஒவ்வொரு புதிய கலைஞர்களுடன் வேலை செய்கிறேன். முக்கியமாக சகல மாவட்டங்களையும் சேர்ந்த புதிய கலைஞர்களை எனது படைப்புகளில் உள்வாங்குவதில் ஈடுபாடு காட்டுகிறேன் . அத்துடன் என்னுடைய சிறுவயது நண்பனும் இசைக்கலைஞனுமான ஸ்ரீ நிரோ . மற்றும் சரத்குமார் இவர் ஒரு ஒளிப்பதிவாளர் அத்துடன் படத்தொகுப்பாளர் இவரும் எனக்கு நிறைய உதவிகளைச் செய்து இருக்கிறார். அதே நேரத்தில் நமது நாட்டைச் சேர்ந்தவர்கள் சர்வதேச அளவிலும் நிறையக் கலைஞர்கள் இருக்கிறார்கள். எனக்கு சரியான நேரத்தில் உதவுபவர்கள் இருக்கிறார்கள். அவர்களை இந்த நேரத்தில் குறிப்பிட வேண்டும். எனது படைப்புகளை தயாரிப்பு உதவிகளை வழங்கியவர்களில் ரஜிதரன், தேனுசன், உதயரூபன் முக்கியமானவர்கள்.

(17பக்கம் பார்க்க)

# அத்தனையும் பொய்!

என் விரல்கள்
பேனாவை பற்றும்போதெலாம்
உணர்வுகள் சிதறுவதை
தவிர்க்க முடியாதுள்ளது

பிரம்மனை நான் நம்பியவனுமில்லை
கம்பனை நான் ரசித்தவனுமில்லை
உனை நான் கண்டபின்னே
அத்தனையும் பொய்த்ததடி

ஒற்றைப் பார்வையால்
ஓராயிரம் அம்புகளை
எய்துவிட முடியுமென
உறுதி செய்தேன்
உன் பார்வை பட்ட பின்பே

ஏனோ ஏழுதிவிட்டேன்
ஆர்வக் கோளாறில்
ஆத்ம திருப்தி
என் கற்பனைக்கே

- கனக தீபகாந்தன் -

# மொட்டுக்களை சிதைக்காதீர்!

நெஞ்சம் முழுவதும்
நிறைந்த கனவுகளுடன்
எதிர்கால ஒளிர்வுக்காய்
கட்டுக் கட்டாய்
ஆசைகள் சுமந்து
பட்டாம் பூச்சிகளாய்
பள்ளியெனும் புனித
பூமிக்கு வரும் பால்முகம்
மாறாத பச்சிளம் சிறார்களை
சிதைக்க மனம் வருகிறதோ?
கலியுக மூளையின்
கலிச்சிந்தை இதுதானோ?
தன்மகளும் தரணியிற்
பொன்மகளாய் மிளிர்வாள் எனும்
பெற்றவரின் இலட்சியமும்
கொடுந்தீயில் எரிந்ததுடன்
அவளுடலும் சாம்பலாய்
மாறும் அவலம் ஏன்?
உயிர் மதிப்பும் தெரியாத
சமூமோ இன்று?
ஒருடல் மட்டும் ஒடிந்து
போகவில்லை
ஓராயிரம் கனவுகள்
ஒடிந்து போகின்றது
பிஞ்சு முகங்கண்டுமா
வஞ்சத்தீ அணைவதில்லை?
அஞ்சியவள் நடுங்கவுமா
உன் கல்மனம் கரைவதில்லை?
மொட்டுக்கள் மலரும் முன்
ஏனிந்த வேட்டை?
உன்னுறவாய் நினைத்தாயானால்
கசக்க மனம் நினைக்காது
பெண்ணவளை மதித்தாலும்
இக்கொடுமை நிலைக்காது

- டக்ஸனா கிருஸ்ணானந்தன் -
(குகதா)



# நளனின் காதல்

ஆகுகி என்ற வேட தம்பதியர் காட்டிலுள்ள குகை ஒன்றில் வசித்தனர். அவ்வழியே வந்த துறவி ஒருவரை அவர்கள் உபசரித்தனர். இரவாகி விட்டதால், குகைக்குள் துறவியும், ஆகுகியும் தங்கினர். அதில் இருவர் தான் தங்க முடியும் என்பதால் வேடன் வெளியில் தூங்கினான். தன் மனைவி ஒரு ஆணுடன் தங்கியிருக்கிறாள் என்ற எண்ணம் அவனுக்கு இல்லை. தன் மீது நம்பிக்கை வைத்த வேடனை முனிவர் பாராட்டினார். அயர்ந்து உறங்கிய வேடனை ஒரு மிருகம் கொன்று விட்டது. விடயமறிந்த ஆகுகியும் உயிர் துறந்தாள்.

சுயநலமில்லாத இத்தம்பதியர் மறுபிறவியில் நள தமயந்தியாகப் பிறந்தனர்.

நிடத தேசத்து வேந்தனாகிய நளன் கல்வி கேள்விகளில், வீர தீரத்தில் தன்னிகரற்றவன். ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவன். சமையல் கலையில் கைதேர்ந்தவன். இன்றைக்கும் கூட சிறந்த சமையலைப் பாராட்டும்போது நளபாகம் என்கிறோம்.

சுயநலமில்லாத இத்தம்பதியர் மறுபிறவியில் நள தமயந்தியாகப் பிறந்தனர். தமயந்தி விதர்ப்ப நாட்டின் இளவரசியாக பிறந்தால். துறவி அன்னப்பறவையாக பிறந்தார். நளன் நிடதநாட்டின் மன்னராக இருந்தான்.

விதர்ப்ப தேசத்து இளவரசியாகிய மங்கை தமயந்தி அன்றலர்ந்த மலர் போல் அழகும் பொலிவும் கொண்டவள். நாணம், அச்சம், மடம், பயிர்ப்பு எனும் நால்வகை குணங்களையே, தேர், குதிரை, யானை, காலாள் எனும் நான்கு வகை சேனைகளாகவும், மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐம்புலன்களையும், நல்வழி நடத்திச் செல்கின்ற அமைச்சர்களாகவும், காலில் அணிந்துள்ள சிலம்பே பேரிகையாகவும், வேற்படையும், வாள்படையுமே இரு கண்களாகக் கொண்டு பெண்மையினை ஆட்சி புரிகின்ற பெண்ணரசியாவாள்.

இத்தகைய சிறப்புமிக்க தமயந்தியின் குணநலன்களை அன்னத்தின் மூலம் கேட்டறிந்த நளன் அவள்பால் காதல் கொண்டான். தன் உள்ளக்கிடைக்கையை அன்னத்தின் வாயிலாக தமயந்திக்குத் தூதாக அனுப்பினான்.

அன்னம் நளனது ஆண்மைச்சிறப்பையும், ஆட்சித் திறமையையும், அறிவுக்கூர்மையையும், பண்பினையும் சொல்லக் கேட்ட கணம் முதலே, அன்னத்தின் பேச்சைக் கேட்ட தமயந்தி காதல் கொண்டாள்.

இதனிடையே, அழகிலும், அறிவிலும் தன்னிகரற்ற கற்புக்கரசி தமயந்திக்கு சுயம்வரம் நடக்கிறது. இதற்கு (நளன் உட்பட) மண்ணுலக மன்னர்கள், விண்ணிலிருந்த தேவர்களும் வந்தனர். அவர்கள் தமயந்தி நளன் மீது கொண்ட காதலை அறிந்து, நளன் போலவே உருவம் கொண்டு காட்சியளித்தனர்.

அனைவரும், நளன் போல் காட்சியளித்ததை எண்ணித் தமயந்தி குழம்பினாள். மனம் முழுதும் நளனை அடைவதிலேயே இருந்தது. நளனை எப்படி அறிவது ? அவள் எவ்வாறு நளனைக் கண்டறிந்தாள் என்பதைப் பின்வரும் பாடல் மூலம் அறிகிறோம் .

சுயம்வரத்தில், நளன் போன்ற தோற்றத்தில் இருக்கும்

**கண்ணிமைத்த லாடிகள் காசினியில் தோய்தலால்**
**வண்ண மலர்மாலை வாடுதலால் - எண்ணி**
**நறுந்தா மரைவிரும்பு நன்னுதலே அன்னாள்**
**அறிந்தாள் நளன்றன்னை ஆங்கு**

அதாவது - தேவர்களுக்கு மனிதர்களிடமிருந்து சில வேறுபாடுகள் உண்டு. தேவர்களின் கண்கள் இமைக்காது. கால்கள் பூமியில் படாது. அவர்கள் சூடும் மாலை வாடாது. ஆனால் மனிதர்களிடத்தில் இவற்றை (கண் இமைத்தல், மாலை வாடுதல், வியர்வை) இயல்பாகக் காண முடியும். இவை நளனிடமும், காணப்பட்டன. இதை வைத்து நளனை மிகச் சரியாக அடையாளம் கண்டு, மாலை சூட்டினாள் தமயந்தி.

தமயந்தியின் அறிவாற்றலையும், உண்மைக் காதலையும் இதன் மூலம் அறிகிறோம்.

# இன்றே செய்

## கலைக் கதிர்



தூய்மை குணமும் துயரில்லா மனமும்
வாய்மை கொண்ட நேர்மை செயலும்
வானாய் பரந்த உள்ள தெளிவுடன்
வருகின்ற வாய்ப்பை சரிவர செய்திடு

ஒற்றுமை ஓங்க வேற்றுமை விலகும்
ஒழுங்கை மீறும் நடத்தை தவறு
நல்ல எண்ணமும் வல்ல துணிவும்
இலக்கை அடைய வழிகள் சொல்லும்

தன்னைப் போலவே பிறரை போற்றும்
தன்மை கொண்டால் தரணியில் வெல்வாய்
சீரிய ஒழுக்கம் சிறப்பை வழங்கும்
சிலையின் எழுத்தே இளமையில் கல்வி

நன்மையை விதைத்து நலன்களை அறுத்திடு
நாளைய விடியல் உனக்கென தோன்றிடும்
நடைமுறை வாழ்வில் நலமுடன் நடையிடு
நன்றே செய் அதை இன்றே செய்திடு

தெ.கரிதரன் (சம்பூர் சமரன்), திருகோணமலை

அ.வா. முஹ்சீன்

# விடுதலை

சுபஹ்த் தொழுகையுடன் அந்த மையத்துச் செய்தி பரவத் தொடங்கியது. அந்த செய்தி மிக வேகமாகப் பரவியது – ஒரு வனத் தீயைப் போன்று, மூலை, முடுக்கெங்கும் தனது தாக்கத்தை வெளிப்படுத்திக் கொண்டு.

அது ஒரு கனமான, கௌரவமான, செல்வாக்குத்தன்மையான மௌத்துச் செய்தி.'முபீன் எம்.பி. மௌத்தாப் போய்த்தார்'

ஒரு புயல்காற்றின் கடுவலிவுடன் அச்செய்தி அனைவரையும் தாக்கியது. சுபஹ்த் தொழுகை முடிந்தவுடன் யாரும் தமது வீட்டுக்குச் செல்லவில்லை. எல்லோரது இலக்கும் முபீன் எம்.பியின் வீடு நோக்கியதாக இருந்தது. செல்போன்களின் விரைவான அழைப்புக்கள் ஊரின் எல்லையை மட்டுமன்றி, கண்டங்களின் எல்லைகளையும் கணத்தில் தாண்டி, அந்தச் செய்தியைத் தூவிச் சென்றன.

முபீன் எம்.பியின் வீடு சனவெள்ளத்தில் மூழ்கியிருந் தது. புதிதாகக் கட்டப்பட்டிருந்த அவரது வீட்டின் அகன்று, விசாலித்திருந்த முற்றத்தையும் கடந்து, வீதிகளையும் நிறைத் ததாய் மக்கள் திரண்டிருந்தார்கள்.

'இஷாவுக்கு வந்திருந்தார். என்னோட கதச்சிப் போட்டுத்தான் போனார்'. 'நான் ஒன்பது மணிக்கு அவரோட போனில கதைச்சேன். எப்பவும் போலத்தான் கதச்சார்' 'சுபஹ்க்கு ஒழுச் செய்யப் போனவர், பாத்ரூமில உழுந்திட்டாராம். உழுந்தவர் அப்பிடியே மௌத்தாப் போய்த்தாராம்'

'சுபுஹானல்லா! நல்ல மௌத்து.' 'இப்பதான் அவருக்கு நாப்பத்தஞ்சி வயசி. அதுக்குள்ள இப்பிடி நடந்திட்டு' 'அஸருக்குப் பொறவுதான் அடக்குவாங்களாம். கொழும்பில இருந்தெல்லாம் ஆக்கள் வாறாங்களாம்' 'பெரிய பெரிய புள்ளியெல்லாம் வாறாங்களாம் 'ஹலோ, அஸ்ஸலாமு அலைக்கும். நான்தான் பேசிறேன். நம்மட முபீன் எம்.பி. அவரு மௌத்தாப் போய்த்தார்.... இப்பதான், சுபஹ்க்கிட்ட.. நான் அவர்ட ஊட்டில இருந்துதான் கதைக்கிறேன்..... சரியா காரணம் தெரியேல. மாரடைப்பாத் தான் இருக்கும்..... அஸருக்குப் பொறவு...... சரி வெக்கிறேன்'. சுமையா தேனீர் தயாரித்துக் கொண்டிருக்கும் போது, அவளுடைய கணவர் வந்து சேர்ந்தார்.

'இஞ்ச ஒங்களுக்கு விசயம் தெரியுமா?' கணவரின் குரலில் நிறைந்திருந்த பரபரப்பு, அவளது தேனீர் தயாரிப்பை நிறுத்தியது. கேள்விக்குறியுடன் தலையை ஆட்டினாள்.

'இல்லியே' 'நம்மட முபீன் எம்.பி. மௌத்தாப் போய்த்தார்'

'இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்' சுமையாவின் குரல் நடுக்கத்துடன் ஒலித்தது. கேள்விப்பட்ட விசயங்களை அவர் சொல்லிக் கொண்டு போனார்.

'சா, எப்பிடிப்பட்ட மனிசன்! எவ்வளவு திடகாத்திரமா இருந்தார்! இந்த வயசில மௌத்தாப் போய்த்தார்.' மனசு கொள்ளாக் கவலையுடன் அவர் சொல்லி முடித்தார்.

சுமையா நேரத்தைப் பார்த்தாள். ஆறு முப்பது. இன்று சனிக்கிழமை. பிள்ளைகளுக்கு பாடசாலை இல்லை. கணவரும் வேலைக்குப்போக மாட்டார். அனேகமாக இன்றைக்கு டியூசனும் நடக்காது. அவளது மனதில் அவசரத் தன்மை குறைந்து விட்டது. கணவர் குடித்து விட்டு வைத்த தேனீர் கோப்பையை கழுவினாள். அதைக் 'கிச்சின் ரேக்கில்' கொளுவும்போது கைநழுவி விட்டது.

'படீர்' 'என்ன அது?' சத்தம் கேட்டு, கணவர் வினா எழுப்பினார்.

'இல்ல, கை தவறிட்டு' சொல்லி விட்டு, சிதறிக் கிடந்த துண்டுகளை அவள் பொறுக்கினாள்.

சுமையா காலைச் சாப்பாடு தயாரிப்பதில் கவனம் செலுத்தினாள் வழக்கமாக வார இறுதி நாள்களிலும், விடுமுறை நாட்களிலும் அவள் பிட்டு அவிப்பாள். பிட்டுக்கு உருளைக் கிழங்கு வெள்ளைக் கறி என்றால் அவளது கணவருக்கு மிகவும் விருப்பம். மற்ற நாள்களில், கணவரும், பிள்ளைகளும், வேலைக்கும் பாடசாலைக்கும் செல்லும் அவசரத்தில் இருக்கையில், பிட்டு அவிப்பது மட்டுமின்றி, அதைச் சாப்பிடுவதும் சிரமமானதாக இருக்கும். இன்று சனிக்கிழமையாக இருந்தும், நிலைமை வேறு. அவள் பிட்டு அவிக்கும் மனநிலையில் இல்லை. அப்படி அவித்தாலும் அதை சாப்பிடும் நிலையில் யாரும் இருக்க மாட்டார்கள்.

'புள்ள, நிமாஸ்! இங்க வாப்பா! கடைக்குப் பேய்த்து, பாண் வாங்கிட்டு வா!' இரண்டாவது பையனிடம் அவள் காசைக் கொடுத்து அனுப்பினாள். 'மௌத்து எல்லாருக்கும் வரும். யா அல்லாஹ்!' அவள் தனக்குள் முணுமுணுத்தாள். அவளுக்கு தலைவலிப்பது போல இருந்தது. இரவு சாப்பிட்டு விட்டு வைத்த பீங்கான்களையும், சட்டிகளையும் எடுத்து அவள் கழுவத் தொடங்கினாள். கழுவும்போதே பாணுக்கு சம்பல் செய்வது என்று முடிவு செய்தாள். கழுவி முடித்தவுடன் அவள் பெரிய வெங்காயத்தை எடுத்து தோல் உரித்து, வெட [illegible]

> 2008ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக புலமைப்பரிசிலுடன் இங்கிலாந்து நாட்டிற்கு கலாநிதிப்பட்ட ஆய்வுக் கல்விக்குச் செல்ல முன்னர் சுவீடன் நாட்டு போஜோ ஊடக அமைப்பினர் அப்போதைய யாழ்ப்பாணம் ஆயர் மேதகு கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையுடன்.....

[illegible] தலையின் பின்புறம் வரை ஓங்கி அடித்ததுபோல வலித்தது. எனினும் அந்த வலி அவளுக்குத் தேவைப்படுவது போலவும் அவள் உணர்ந்தாள். கொஞ்சம் உப்புத் தண்ணீரை சிறிய கோப்பைக்குள் இட்டு, அதற்குள் வெட்டுப் பட்ட விரலை வைத்து அமுத்தினாள். கடுப்பு அதிகரித்து, பின்னர் குறைந்தது. அவளுக்கு வியர்த்தது. சேலைத் தலைப்பால் முகத்தைத் துடைத்துக் கொண்டாள்.

சுமையா சம்பல் செய்யும் வேலையில் முழுமையாக ஆழ்ந்திருந்த தருணத்தில், அவளது கடைசி மகள் ஓடி வந்து அவளின் காலைக் கட்டிக் கொண்டாள்.

'உம்மா' நித்திரை விட்டு எழுந்தவுடன் அவள் வழக்கமாகச் செய்கின்ற செயல் இது.

'சீ, தள்ளிப் போ' சுமையா கோபத்துடன் அவளைத் தள்ளி விட்டாள் சிறுமி விக்கித்து நின்றாள். அவளுடைய நான்கு வருட வாழ்வனுபவத்தில், தனது உம்மா தன்னுடன் கோபிப்பது இதுதான் முதல் தடவை. விழி பிதுங்கி, வாய் திறந்து நின்றவள், பின் சத்தமிட்டு அழத் தொடங்கினாள். சுமையா தனது செயலின் விபரீதத்தை உணர்ந்தவளாக, மகளைத் தூக்கி, இடுப்பில் வைத்தாள்.

'இல்லம்மா, இல்லம்மா! என்ட கண்ணில்லியா! உம்மாக்குத் தலையிடிக்குதும்மா. அதுதான் அதட்டிட்டேன். கத்தாதங்கம்மா. என்ட கிளியில்லியா' மகளின் கன்னங்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்து விட்டாள் சிறுமியின் அழுகை நின்றும் தேம்பல் நிற்பதற்கு கணிசமான நேரம் எடுத்தது. விட்டு விட்டு, ஒரு விக்கல் போன்று, அவளது தேம்பல் ஒலித்தது.

முபீன் எம் .பி. இப்போது எம்.பி. இல்லை. சென்ற தேர்தலில் அவர் தோல்வியடைந்து விட்டார்.

எனினும் எம்.பி. என்ற சொல் ஒரு அடைமொழியாய் அவருடன் ஒட்டப்பட்டு விட்டது. அவர் எம்.பியாக வந்ததே ஒரு தற்செயல் நிகழ்வு போன்றிருந்தது. அவர் அத்தகைய எண்ணம் எதையும் கொண்டிருந்தவரல்ல. தனது உயர்தரப் பாடங்களில் ஒன்றாக, அவர் அரசியல் விஞ்ஞானத்தை படித்திருந்தார். பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டு, பட்டப் படிப்பை தொடர்ந்தபோதும், அவர் அரசியலை ஒரு பாடமாகத் தேர்ந்திருந்தார்.

பல்கலைக்கழகப் படிப்பு முடிந்து, அவர் ஊர் வந்தபோது, பக்கத்து ஊரைச் சேர்ந்த ஒரு பெரிய பணக்காரர் தனது ஒரே மகளுக்காக அவரை திருமணம் பேசி வந்தார். திருமணப் பேச்சுவார்த்தையானது, முபீன் எதிர்பார்த்திராத ஒரு வாய்ப்பை முன்னிறுத்தி அமைந்திருந்தது. திருமணம் பேச வந்தவர் மிக உறுதியாகக் கூறினார். 'என்ட மகள தம்பி கலியாணம் முடிச்சா, அவர அரசியல்ல ஒரு பெரியாளா நான் ஆக்கிக் காட்டுவேன்' அது முபீனும், அவரது குடும்பத்தினரும் அதுவரைக்கும் சிந்தித்திருக்காத ஒரு உத்தரவாதமாக இருந்தது. வந்திருந்தவர் செல்வந்தர் மட்டுமல்ல, செல்வாக்குமிக்கவராகவும் இருந்தார். பல படகுகளுக்கு சொந்தக்காரராக இருந்த அவரது சொல்லுக்கு, அவரது ஊரைச் சேர்ந்த அனேகமாக அனைவரும் கட்டுப்படக் கூடியவர்களாக இருந்தார்கள்.

திருமணம் முடிந்த அடுத்த வருடத்தில் இடம்பெற்ற பிரதேச சபைத் தேர்தலில் முபீன் வெற்றி பெற்று, தவிசாளராக மாறினார். பல்கலைக்கழகத்தில் அரசியல் படித்தவர் என்ற தகுதி, ஒரு பெருமிதமான உணர்வுடன் கலந்தெழுந்து, அவருக்கு அமோகமான மக்கள் ஆதரவைப் பெற்றுக் கொடுத்தது.

அதிலிருந்து அவரது அரசியல் பயணம் தொடர்ச்சியாக முன்னேற்றமடைந்தது. அடுத்து வந்த இரண்டு நாடாளுமன்றத் தேர்தல்களிலும் அவர் வெற்றி பெற்று, முபின் எம்.பி. என மங்காத நாமம் பெற்றார்.

மூன்றாவது தேர்தலில் அவர் கட்சி மாறி போட்டியிட்டபோது, பலரும் எதிர்பாராத விதத்தில் அவர் தோல்வியடைந்தார்.

அந்தத் தோல்வி அவரைக் கடுமையாகப் பாதித்தது. அதிகாரம் எவ்வளவு வலிமைமிக்கது என்பதை அதிகாரத்தை இழந்தபோதுதான் அவர் சரியாகப் புரிந்து கொண்டார். முபீ ன் எம்.பி. என்றே தான் இப்போதும் அழைக்கப்பட்டபோதும், அந்த அழைப்பு, வெறுமனே ஒரு வெற்று வார்த்தை என்பது அவருக்கு நன்றாகவே தெரிந்திருந்தது. தனது ஊரிலும், அரசியல் அரங்கிலும் தான் கிட்டத்தட்ட ஒரு செல்லாக் காசு போல ஆகிவிட்டதை அவர் உணர்ந்தார். தான் எம்.பியாக இருந்த போது, தன்னைத் தேடிவந்தவர்களும், தன்னுடன் அமர்ந்திருப்பதை ஒரு பெரும் பாக்கியமாகக் கருதியவர்களும் இப்போது தன்னிடமிருந்து தூரமாகி விட்டதை அவர் வலிக்கும் நெஞ்சுடன் அவதானித்தார்.

அந்தத் தோல்விக்குப் பின்னர், பெரும்பாலும் அவர் தன்னைத் தனிமைப்படுத்திக் கொண்டார்.

தொழுகைக்காக பள்ளிவாசலுக்கு செல்வதைத் தவிர, வேறு நேரங்களில் அவர் வீட்டிற்குள் முடங்கிக் கொண்டார். ஒருநாள் இரவில் தனக்கு கடுமையான நெஞ்சுவலி ஏற்பட்ட போது, அதைத் தனது மனைவிக்குக் கூடத் தெரிவிக்காமல், அந்த வலியை தானே தாங்கி அடக்கிக் கொண்டார். பின்னர் நெஞ்சு வலி இல்லாமலாகி, அதன் பின் அதன் அறிகுறி எதுவும் தென்படாத நிலையில், அந்த இரவின் அனுபவம் அவருடனேயே மறைந்து விட்டது. திடீரென்று சம்பவித்த அவரது மரணம், அன்றைய வலியின. உள்ளூறைந்து வளர்ந்த நோயின் விளைவு என்பதை அவர் மட்டுமே அறிவார்.

அவரது இறுதிச் சடங்குக்கு பக்கத்து ஊர்களிலிருந்தெல்லாம் ஆட்கள் வந்து கூடினார்கள்.

கொழும்பில் இருந்தும் அரசியல் கட்சிகளைச் சேர்ந்த நபர்கள் வந்திருந்தார்கள். ஆனால் பலரும் எதிர்பார்த்திருந்ததைப் போல பெரிய புள்ளிகள் யாரும் வரவில்லை. கட்சிகளின் பின்வரிசை உறுப்பினர்கள்தான் சமூகமளித்திருந்தார்கள். எல்லோரும் வந்து சேர காலதாமதமாகியதால், அஸருக்கு என முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்த இறுதிச் சடங்கு மஹ்ரிபுக்குப் பின்னதாக மாறியது.

அவரது அடக்க நிகழ்வில் வெள்ளம்போல் மக்கள் திரண்டிருந்தார்கள். அவர் முதன்முறை தேர்தலில் வெற்றி பெற்ற போது, அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் கலந்து கொண்ட மக்களை விட, பிரமாண்டமான அளவில் மக்கள் அவரது அடக்க நிகழ்வில் கலந்து கொண்டார்கள் கட்சி வேறுபாடுகளின்றி, அவரது மரணத்தின் துயரில் அவர்கள் இணைந்திருந்தார்கள். மையத்துத் தொழுகைக்காக பள்ளிவாசலில் இடம் போதாதிருந்ததால், மக்கள் தாம்நின்ற இடங்களிலேயே தொழுது கொண்டார்கள். இறுதி ஊர்வலம் மிகத் தொலைவு வரை நீண்டிருந்தது.

சுமையா மையத்துக்குச் செல்லவில்லை. உம்மாவும், சகோதரிகளும், கணவரும் கேட்டபோது அவள் கூறினாள்,

'எனக்குச் சரியான தலையிடியா இருக்குது. அங்க வந்தா இன்னுங் கூடிடும்' அவள் ஊஞ்சலில் அமர்ந்திருந்தாள். அவளது கடைசி மகள் உறங்கிக் கொண்டிருந்தாள்.

மத்தியானம் சாப்பிடும்போது, அவளது கணவர் இன்னுமொரு விடயத்தைக் கூறினார்.

'கேட்டீங்களா, முபீன் எம்.பி.க்கு இன்னொரு பொஞ்சாதி இருக்காம். அவரு எம்.பியா இருக்கக்குள்ள கொழும்பில எங்கயோ முடிச்சதாம். ஒரு பொடியனும் இருக்கிறானாம். அவங்களும் மையத்துக்கு வந்திக்கிட்டு இருக்காங்களாம்.'

'இஞ்ச, மௌத்தாப் போன ஆக்களப் பத்தி கதச்சாப் பாவமென்டு சொல்றாங்க. அதால நம்மளும் கதைக்காம இரிப்போம்' சுமையா மென்மையான முறையில் அந்தக் கதைக்கு முற்றுப் புள்ளி வைத்திருந்தாள். இப்போது அவள் ஊஞ்சலில் அமர்ந்திருந்தபோது அந்த விடயம் திரும்பத் திரும்ப அவளது நினைவிற்குள் வந்து சுழன்று கொண்டிருந்தது.

அவள் ஊஞ்சலில் இருந்து இறங்கியபோது, மஹ்ரிபுக்குப் பாங்கு சொல்லும் ஓசை கேட்டது. அதன் பின்னர், மெல்ல, மெல்ல பெண்களின் பேச்சுக் குரல்கள் கேட்கத் தொடங்கின. மையத்துக்குச் சென்றவர்கள் திரும்பி வந்து கொண்டிருந்தார்கள். அவளது உம்மா களைத்துப் போய், இடுப்பைப் பிடித்துக் கொண்டு வந்து வாசல்படியில் அமர்ந்து கொண்டார்.

'யா அல்லாஹ்! என்ன சனம் புள்ள! அல்லா அவருக்கு சுவனத்தக் குடுக்கனும்' களைப்புடன் ஒலித்தபோதும், மனம் நிறைந்த வேண்டுதலாக அது இருந்தது.

சுமையா எழுந்து அவர்களது படுக்கை அறைக்குள் போனாள். அங்கு கட்டிலுக்கு கீழ் வைக்கப்பட்டிருந்த ஒரு ஷூட்கேஸை இழுத்து எடுத்தாள். அவளது திருமணத்தின் போது உடுத்திய கூரைச்சேலையுடன் கூடிய திருமண ஆடைகள் அதற்குள் இருந்தன. அவற்றுக்கு அடியில், மடித்து வைக்கப்பட்டிருந்த பத்திரிகை அடுக்குகளின் நடுவில் கையை விட்டு அவள் ஒரு போட்டோவை வெளியே எடுத்தாள். மங்கிப் போயிருந்த கறுப்பு – வெள்ளை புகைப்படம் அது. க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக் காக எடுக்கப்பட்ட தபால் அடையாள அட்டைக்கான அந்தப் புகைப்படத்தில் இன்னமும் மீசை அரும்பாத முபீன் எம்.பி. விழி பிதுங்க, விறைப்புடன் காணப்பட்டார். ஷூட்கேஸை மீண்டும் கட்டிலுக்கு அடியில் தள்ளிவிட்டு, சுமையா அடுப்படிக்கு வந்தாள். அடுப்பில் அணையாதிருந்த தணல் கட்டிகளை ஒன்று சேர்த்து ஊதினாள் . சிறுசிறு பொறிகளுடன் மின்னிய பின், அவை எரிய ஆரம்பித்தன. சுமையா கடைசியாக ஒருமுறை அந்தப் படத்தைப் பார்த்தாள்.

பின்னர் அதை எரியும் நெருப்பிற்குள் போட்டாள் முதலில் நீலமாய் கனன்ற அந்த புகைப்படம் பின், கரும்புகையை வெளியிட்டவாறு எரிந்தது. அந்தப் புகையுடன், அவள் முன்னர் வாழ்ந்த வீட்டின் வேலிக்கு இந்தப் பக்கம் அவளும், அந்தப் பக்கம் முபீனுமாக நின்று, இரவின் சாட்சியாய், அவர்கள் இருவருக்கு மட்டுமே தெரிந்ததாக வளர்ந்து, பின் அவனுக்கு திருமணம் நிச்சயமான அன்று இரவு அவளது கைகளைப் பற்றியவாறு அவன் அழுததுடன் முற்றுப் பெற்ற அவளது ஒரேயொரு காதலின் நினைவுகள் மேலெழுந்தன.

புகைப்படம் முற்றாக எரிந்து, சாம்பலானபோது, தன் மனசு பாரங் குறைந்து, மென்மையாவதை சுமையா உணர்ந்தாள். இருபத்தைந்து வருடங்களாக தனது இதயத்தின் அடியாழத்தில் மிகச் சின்னதாய் கனன்று, அவ்வப் போது தன்னைச் சுட்டெரித்துக் கொண்டிருந்த வலிமிக்க நினைவு இப்போது தன்னிடமிருந்து அகன்று விட்டதை அவள் உணர்ந்தாள். கறைபடியா சந்தோசம் தனக்குள் நிறைந்தொழுகுவதை அவள் முதன்முறையாக அனுபவித்தாள். முற்றான விடுதலை உணர்வின் முழுமை தனக்குள் பரவி, தன்னை புதிய வானத்தில் பறக்கச் செய்வதை உணர்ந்து அவள் பூரித்தாள். அவளாக எதுவும் செய்யாமலே அவளது தலைவலி அவளிடமிருந்து அகன்று விட்டிருந்தது.

சுமையா மா குழைக்கும் சட்டியை எடுத்தாள். சிவப்புப் பச்சையரிசி மாவை அதில் கொட்டி, தண்ணீரை ஊற்றி அதைப் பிசைந்தாள். பின், உருளைக் கிழங்கை தோல் சீவத் தொடங்கினாள்.


வெளியே அவளது கணவர் வரும் சத்தம் கேட்டது.

# ஆயரின் பெயரில் அமைந்து அரும்பணியில் ‘பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்’ நிறுவனம்

## யாழ் ஊடக அமையத்துடன் இணைந்து புதிய ஊடகப்பணிகள் – 06

- கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் -
(ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம்; ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம் இயக்குனர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்)

**யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயர் மேதகு கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை பெயரிலே பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் அமைந்துள்ளது. அதன் பணிகளைத் தொடர்ந்து விளக்குகிறது இக்கட்டுரை. இந்தத் தொடரில் ஏற்கனவே,யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயர் மேதகு கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையின் வாழ்வும் பணியும், மன்னார் மறைமாவட்ட ஆயராக அவர் நியமனம், தொடர்ந்து யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயராக நியமனம், அவரின் காலத்தில் யாழ் மறைமாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட கட்டுமானப் பணிகள் ஆகிய விடயங்களைப் பார்த்தோம். அதன் தொடர்ச்சி இங்கு பிரசுரமாகின்றது.**



2003ஆம் ஆண்டு புனித வளனார் கத்தோலிக்க அச்சகத்தை ஆயர் திறந்து வைத்த போது எடுக்கப்பட்ட படம். படத்தில் கத்தோலிக்க அச்சகத்தை வடிவமைத்த திருவாளர் தனசிங்கம் அவர்களுடன் கத்தோலிக்க அச்சக அதிபர் ரூபன் மரியாம்பிள்ளை அடிகள்...

### மன்னார் - யாழ்.மறைமாவட்டங்களில் வேதனை கொடுத்த விடயங்கள்

மன்னார் மறைமாவட்டத்தைப் பொறுப்பெடுத்தவுடன் நடைபெற்ற இனக்கலவரம் (1983), யாழ்ப்பாண மறை மாவட்டத்தைப் பொறுப்பெடுத்தவுடன் நடைபெற்ற இடப்பெயர்வு (1995), இலங்கை முழுவதையும் குழப்பத்தில் ஆழ்த்திய சுனாமி (2004), தமிழ் மக்கள் அனைவரையும் சோகத்திற்கு உள்ளாக்கிய முள்ளிவாய்க்கால் இறுதிப் போர் (2009) - இவை எல்லாம் பொதுவான விதமாக துன்பத்தையும், மன உளைச்சலையும் தந்தாலும் தனிப்பட்ட விதமாக நெஞ்சுக்கு நெருக்கமாக வேதனை கொடுத்த விடயங்களும் உண்டு.

வங்காலை பங்கில் பணியாற்றிய யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த எம்.மேரி பஸ்ரியன் அடிகளார் சுட்டுக்கொல்லப்பட்டமை (06 ஜனவரி 1985), ஜி.யோண் லொறற் அடிகளாரின் திடீர் சுகவீன மரணம் (01 ஜனவரி 1996), ரி.ஜிம்பிறவுண் அடிகளார் காணாமல் போனமை (20 ஓகஸ்ற் 2006), யாழ் மறை மாவட்டத்தைப் பிறப்பிட



2008ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக புலமைப்பரிசிலுடன் இங்கிலாந்து நாட்டிற்கு கலாநிதிப்பட்ட ஆய்வுக் கல்விக்குச் செல்ல முன்னர் சுவீடன் நாட்டு போஜோ ஊடக அமைப்பினர் அப்போதைய யாழ்ப்பாணம் ஆயர் மேதகு கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையுடன்.....

மாகக் கொண்டு மன்னார் மறைமாவட்டத்தில் இணைந்து பணியாற்றிய எம்.பாக்கிய றஞ்சித் அடிகளாரின் கிளேமோர் தாக்குதல் மரணம் (26 செப்டெம்பர் 2007), எம்.எக்ஸ்.கிளி கருணாரட்ணம் அடிகளாரின் கண்ணிவெடித் தாக்குதல் மரணம் (12 ஏப்ரல் 2008), இறுதிப் போரில் எம்.ரி.சறத் ஜீவன் அடிகளாரின் அதிர்ச்சி மரணம் (18 மே 2009), ஜி.ஏ.பிரான்சிஸ் யோசவ் அடிகளார்



1999ஆம் ஆண்டு புனித வளனார் கத்தோலிக்க அச்சகத்தை கட்டுவது தொடர்பான கலந்துரையாடல் ஜேர்மன் நாட்டு தேவையில் இருக்கும் ஆலயத்திற்கு உதவி என்ற அமைப்பினருடன் நடைபெற்றபோது கத்தோலிக்க அச்சக வளாகத்தில்.....

காணாமல் போனமை (18 மே 2009), லக்ஸ்மன் அடிகளாரின் விபத்து மரணம் (14 நவம்பர் 2013) என்பன மறக்க முடியாத சோக நிகழ்வுகளாகின.

### தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையின் ஆளுமை

தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை ஒரு தலைசிறந்த போதகர். மறைக்கல்வி அறிவிப்பிலும் விவிலிய போதிப்பிலும் பாண்டித்தியம் பெற்றவர். மறைக்கல்வி கற்பிப்பதில் எளிமையும் ஆழத்தன்மையும் கொண்டவர்.

சிறுவர்களைக் கவரும் விதமாக விடயங்களை விளக்கும் நுட்பத்தை நன்கு தெரிந்தவர். இவரின் விவிலிய அறிவு அவரின் மறையுரைகளில் மிளிரும் தெளிவான மேற்கோள்களிலும் குறிப்பான எடுத்துக் காட்டுக்களிலும் விளங்கும்.

### கதை சொல்வதில் வல்லவர் கதை கதையாய்ச் சொல்லுவார்

கதை சொல்வதில் வல்லவரான இவர் கதை கதையாய்ச் சொல்லுவார்.எல்லோருக்கும் புரியும் விதமாக கதை வழியே மறையுரையை நகர்த்துகின்ற இவரின் பாணி இவருக்கே உரியது. சிறுவர் முதல் இளையோர் வரை அனைவரும் இவரின் கதைகளுக்காகவே மறையுரை களை உன்னிப்பாகக் கவனிப்பர்.

ஒரு தனித்துறை என்று இல்லாமல் எல்லாத்துறைகளிலும் அறிவு பெற்ற இவருக்கு நவீன கணினி நுட்பங்களும் சமூக வலைத்தளங்களும் கூட நன்கு தெரியாதவை அல்ல.

அறையில் இருந்தாலும் அனைத்து விடயங்களை



2003ஆம் ஆண்டு புனித வளனார் கத்தோலிக்க அச்சகத்தை ஆயர் திறந்து வைத்த பின்னர் கட்டடக் குழுவினருடன் எடுக்கப்பட்ட படம்.

யும் அறிந்து எதுவுமே தெரியாதவர் போல் இருப்பவர். தெரிந்த விடயங்களையும் மற்றவர்கள் சொல்லும் போது கூட புதிதாதகக் கேட்பது போல் உணர்வோடும் உணர்ச்சியோடும் செவிமடுக்கக் கூடியவர்.

அமைதியாகக் கேட்பது, ஆர்வமாகக் கிரகிப்பது, பொருத்தமாகப் பதில் தருவது எல்லாம் இவரின் தொடர்பாடல் கலையின் நுட்பங்களே. குருக்கள் பற்றிய ஆழ்ந்த அறிவு, அவர்கள் மட்டில் அன்பான அணுகுமுறை, அவர்கள் பற்றிய தெளிவான புரிந்துணர்வு என்பனவும் இவரின் ஆளுமையின் ஆற்றல்கள்.

உடனடியாக உணர்ச்சிவசப்படாமல் புரிந்துணர்வு கொள்ளல், ஏற்றுக்கொள்ளல், விட்டுக்கொடுத்தல், பாராட்டித் தட்டிக்கொடுத்தல் என்பவற்றோடு கூடிய இவரின் அணுகுமுறை குழப்பத்தில் வருவோருக்கு உள அமைதியையும், மன நிம்மதியையும், உடல் இளைப்பாற்றலையும் தருபவை.

கடினமாக உழைப்பவர்களை இனம் காண்பதும், அவர்களை இன்னும் அதிகமாக உழைக்கும்படி ஆர்வம் ஊட்டுவதும், அறிவுரைகளையும் அன்பு மொழிகளையும் கூறி வழிகாட்டுவதும் இவரின் நற்பண்புகளாகும்.

அதிகாரம், ஆடம்பரம், பெருமை என்பன இன்றி அமைதி - அர்ப்பணிப்பு - தாழ்மை என்பவற்றோடு பணியாற்றுபவர். பொறுமையின் பொக்கிஷமாய், எழிமையின் உறைவிடமாய் என்றும் இருப்பவர்.

தவறு இழைத்தோரை மன்னிப்பதும், தவறுகளை மறந்து அவர்களை அணைத்துக் கொள்வதும், அன்பாக அறிவுரை வழங்கி வழிகாட்டுவதும் இவருக்கு உரிய பண்புகள் ஆகும்.

### இறை பக்தியில் என்றும் நிறைந்து இறை நம்பிக்கையில் ஊறித்திளைத்தவர்

இறை பக்தியில் நிறைந்து, இறை நம்பிக்கையில் ஊறித்திளைத்த இவர்.செபத்தின் மனிதர்.காலத்தின் தேவைகளைக் கவனத்தோடு குறிப்பாகக் கணிப்பது, தூர நோக்கோடு துணிவுடன் திட்டமிட்டுப் பணியாற்றுவது இவரின் பண்புகள்.

பிழைகள் நடக்கும் போதும், கணிப்புக்கள் தவறாகும் போதும், முடிவுகள் பிழையாகும் போதும் மௌனமாக ஏற்றுக்கொள்வதும், மாற்றுத்திட்டங்களை முன்வைப்பதும் இவரின் இனிய பண்புகள்.



(2001ஆம் ஆண்டு பாதுகாவலன் பத்திரிகையின் 125ஆவது ஆண்டு நிறைவில் விழா மலரை பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியர் ரூபன் மரியாம் பிள்ளை அடிகள் அப்போதைய யாழ்ப்பாணம் ஆயர் மேதகு கலாநிதி தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகைக்கு வழங்கிய போது...

காலைக்கதிர் Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
கிறிஸ்தவ செய்தி
- கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் -
(ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம்; ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம்; இயக்குநர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்)

கலவரமான நேரங்களில் கண்டிப்பாக இருப்பதும், நினைத்த காரியங்களைச் சாதிப்பதில் விடாப்பிடியாய் இருப்பதும், விடயங்களை மூடி தம் கட்டுப்பாட்டில் இறுக்கமாக வைத்துக்கொள்வதும், காசு விடயத்தில் கவனமாக இருப்பதும் கூட இவரின் பண்புகளே.

### வேறு எந்த ஆயரும் அனுபவிக்காத கொடிய அனுபவத்தின் வழிப் பயணப்பாதை

வேறு எந்த ஆயரும் அனுபவிக்காத கொடிய அனுபவத்தின் ஊடாக தம் பயணப் பாதையை அமைத்துள்ளார் என்ற ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப் பிரகாசம் ஆண்டகையின் வார்த்தைகளை நினைவு கூர்ந்தேன். அநேக குருக்களின் அகால இறப்புக்களைத் தனியாக நின்று தாங்கிக் கொண்டவர் இவர்.

1995 ஆம் ஆண்டு இடப்பெயர்வின் போது நடந்த அந்த சம்பவத்தை மறக்க முடியாது. அந்தச் சம்பவம் பற்றி ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகைக்குத் தெரிவிக்கப்பட்ட போது நான் ஆயருடன் இருந்தேன். யாழ்ப்பாணம் கத்தோலிக்க திருச்சபைக்கு மட்டுமல்ல



2001ஆம் ஆண்டு கத்தோலிக்க அச்சகத்தை கட்டுவது தொடர்பான கலந்துரையாடலில் ஆயர் மற்றும் ஆயரின் செயலர் மறைந்த செல்வராஜா அடிகள், கத்தோலிக்க அச்சக போமன் மறைந்த அன்ரனி ஆகியோர்.

இலங்கைக் கத்தோலிக்க திருச்சபைக்கும் பேரதிர்ச்சியைக் கொடுத்த சம்பவம் அது.

(தொடரும்....)

# தாய்வான் நாட்டின் பாதுகாப்புக்கு அமெரிக்கா ‘இரும்புப் போர்வை’

## சீன அச்சுறுத்தலையும் மீறி அங்கு விஜயம் செய்த அமெ. சபாநாயகர் நான்சி பெலோசி அறிவிப்பு



சீனாவின் கடும் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் துணிச்சலுடன் தாய்வான் விஜயத்தை முன்னெடுத்த அமெரிக்க நாடாளுமன்றின் சபாநாயகர் நான்சி பெலோசி, அங்கிருந்தபடி ‘உலகில் ஜனநாயகம் மற்றும் எதேச்சதிகாரம் ஆகியவற்றுக்கு இடையே ஒரு போராட்டம் உள்ளது. அமெரிக்கா அதிலிருந்து பின்வாங்க முடியாது.’ - என்று கடந்த புதனன்று அறிவித்தார்.

பெய்ஜிங்கின் அச்சுறுத்தல்களை நிராகரித்த பெலோசி இந்தக் கருத்துக்களை தைபேயில் வைத்துத் தெரிவித்தார். அமெரிக்க நாடாளுமன்றக் குழு செவ்வாய் இரவு தாய்வானில் தரையிறங்கியது. பெலோசி தாய்வானின் ஜனாதிபதி சாய் இங் - வென் உட்பட உயர்மட்டத் தலைமையுடன் பல விவாதங்களை நடத்தினார்.

தாய்வான் மீதான ஆக்கிரமிப்பை எவ்வாறு தவிர்க்க முடியும் என்ற கேள்விக்கு பெலோசி பதிலளித்தார்.

உலகில் ஜனநாயகத்திற்கும் எதேச்சதிகாரத்திற்கும் இடையே போராட்டம் உள்ளது. அதிலிருந்து நாம் பின்வாங்க முடியாது. ஆதரவைப் பெறுவதற்காக சீனா தனது மென்மையான சக்தியைப் பயன்படுத்துவதால், தாய்வானைப் பற்றி அதன் தொழில்நுட்ப முன்னேற்றத்தின் அடிப்படையில் பேச வேண்டும், மேலும் தாய்வானின் தைரியம் ஜனநாயக அடிப்படையானது. அது மக்களினால் வெளிப்படுத்தப்பட வேண்டும்” - என்றார்.

தனது வருகை குறித்து சீனாவின் ஆக்கிரோஷமான அச்சுறுத்தலுக்குப் பதிலளித்த பெலோசி, ஜனநாயக ரீதியிலான ஆர்ப்பாட்டம் நாட்டில் என்ன நடக்கிறது என்பதற்கு வலுவான வேறுபாட்டைத் தெளிவுபடுத்துகிறது என்று கூறினார்.

ஹொங்கொங்கில் என்ன நடந்தது என்பதற்கு மேலும் ஆதாரம் தேவையில்லை. ஒரு நாட்டில் இரண்டு முறை நடக்க அனுமதிக்க வேண்டியதில்லை. தாய்வானுக்கு வலுக்கட்டாயமாக எதுவும் நடப்பதை நாங்கள் விரும்பவில்லை.” என்று அவர் தொடர்ந்து கூறினார்.

முன்னதாக, தீவு நாடான தாய்வானுக்கு வொஷிங்டனின் ஆதரவை பெலோசி மீண்டும் வலியுறுத்தினார்.

தாய்வானின் இறையாண்மையைப் பாதுகாப்பதற்கான அமெரிக்காவின் உறுதிப்பாடு இரும்புப் போர்வை என்று அவர் குறிப்பட்டார்.

தாய்வானுடன் எப்போதும் நிற்க அமெரிக்கா உறுதிமொழி அளித்துள்ளது. இந்த வலுவான அஸ்திவாரத்தில், பிராந்தியத்தில் பரஸ்பர பாதுகாப்பை மையமாகக் கொண்ட சுய - அரசு மற்றும் சுயநிர்ணயத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு செழிப்பான கூட்டாண்மை மற்றும் பொருளாதார செழிப்புக்கு உறுதியளிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

தைபேயில் உள்ள ஜனாதிபதி அலுவலகத்தில் அதிபர் சாய் இங் - வெனுடனான தனது சந்திப்பின் போது, பெலோசி, தாய்வான் ஒரு செழிப்பான நாடு என்று குறிப்பிட்டார்.

மேலும்நாடுஎதிர்கொள்ளும் சவால்களுக்கு மத்தியிலும்நம்பிக்கை,தைரியம் மற்றும் உறுதிப்பாடு ஆகியவை மூலம் அமைதியான மற்றும் வளமான எதிர்காலத்தை உருவாக்க முடியும் என்பதை தைபே உலகிற்கு நிரூபித்ததாக அவர் கூறினார்.




இப்போது, முன்னெப்போதையும் விட, தாய்வானுடன் அமெரிக்காவின் ஒற்றுமை முக்கியமானது. அதுதான் இன்று நாம் கொண்டு வரும் செய்தி என்று அவர் மேலும் கூறினார்.

சீனாவின் அதிகரித்து வரும் அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் வகையில் தாய்வானின் 23 மில்லியன் மக்களுடன் அமெரிக்க ஒற்றுமையை அங்கு தரையிறங்கிய பிறகு, பெலோசி வெளிப்படுத்தினார்.

அமெரிக்க ஹவுஸ் சபாநாயகர் தரையிறங்கிய சிறிது நேரத்திலேயே, தாய்வானின் தேசிய பாதுகாப்பு அமைச்சகம் உறுதிப்படுத்தியபடி, 21 சீன இராணுவ விமானங்கள் தாய்வானின் வான் பாதுகாப்பு அடையாள மண்டலத்தின் தென்மேற்கு பகுதிக்குள் பறந்தன.

தாம் தாய்வான்வந்தவுடன், டுவிட்டரில், பெலோசி, எங்கள் காங்கிரஸின் பிரதிநிதிகள் தாய்வானுக்கான விஜயம், தாய்வானின் துடிப்பான ஜனநாயகத்தை ஆதரிப்பதில் அமெரிக்காவின் அசைக்க முடியாத உறுதிப்பாட்டை மதிக்கிறது என்று கூறினார்.



அமெரிக்க சபாநாயகரின் தாய்வான் பயணத்தை சீனா கடுமையாக எதிர்த்தது. இந்தப் பயணம் ‘ஒரு சீனா கொள்கை’ மற்றும் இரு நாடுகளுக்கு இடையே கையெழுத்திடப்பட்ட கூட்டு அறிக்கையின் விதிகளை கடுமையாக மீறுவதாக அது செவ்வாயன்று குறை கூறியது.

சீனாவின் கடுமையான எதிர்ப்பு மற்றும் தீவிரமான பிரதிநிதித்துவங்களைப் பொருட்படுத்தாமல், அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் சபாநாயகர் நான்சி பெலோசி சீனாவின் தாய்வான் பகுதிக்கு ஓகஸ்ட் 2 ஆம் திகதி, விஜயம் செய்தார். இது ஒரு சீனா கொள்கை மற்றும் மூன்று சீனா - அமெரிக்கக் கூட்டு அறிக்கைகளின் விதிகளை கடுமையாக மீறுவதாகும் என்று சீன வெளியுறவு அமைச்சகத்தை மேற்கோள்காட்டி சின்ஹூவா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

(மூலம்: ஏ.என்.ஐ.)

# சீனாவின் போக்கை கண்டிக்கிறது அமெ.



தாய்வான் ஜலசந்தி மற்றும் பிராந்தியத்தின் அமைதி, ஸ்திரத்தன்மையை காக்கும் நோக்கத்திற்கு முரணாகவும், பொறுப்பற்ற விதத்திலும் சீனா செயல்பட்டு வருவதை கண்டிப்பதாக அமெரிக்கா எச்சரித்து உள்ளது.

தென்கிழக்கு ஆசிய நாடான தாய்வானை, சீனா சொந்தம் கொண்டாடி வருகிறது. தாய்வானை தன்னுடன் அதிகாரப்பூர்வமாக இணைப்பதற்கான நடவடிக்கைகளை அந்நாடு மேற்கொண்டுள்ளது. தேவைப்பட்டால் தாய்வானை கைப்பற்றுவோம் என்றும் சீனா தெரிவித்துள்ளது. இந்த விவகாரத்தில் தாய்வானுக்கு ஆதரவாக அமெரிக்கா செயல்பட்டு வருகிறது

இந்நிலையில், அமெரிக்க சபாநாயகர் நான்சி பெலோசி சமீபத்தில் தாய்வான் வந்தார். அவரது வருகையை சீனா கடுமையாக எதிர்த்தது. அவர் வந்து திரும்பிய மறுநாள், தென் சீன கடல் பகுதியில், தாய்வான் ஜலசந்தியில் போர்ப் பயிற்சியை சீனா துவக்கியது. அந்நாட்டு கடலின் வடகிழக்கு மற்றும் தென்கிழக்கு பகுதியில் 11 ஏவுகணைகளை அது ஏவியது.

இது குறித்து அமெரிக்க தேசிய பாதுகாப்பு கவுன்ஸிலின் ஒருங்கிணைப்பாளர் ஜோன் கிர்பி கூறியவை வருமாறு:-

சீனாவின் செயலை வன்மையாகக் கண்டிக்கிறோம். தாய்வான் ஜலசந்தி மற்றும் பிராந்தியத்தின் அமைதி, ஸ்திரத்தன்மையை காக்கும் நோக்கத்திற்கு முரணாகவும், பொறுப்பற்ற விதத்திலும் சீனா செயல்பட்டு வருகிறது.

தாய்வானுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை தீவிரப்படுத்த, நான்சி பெலோசியின் வருகையை சீனா காரணமாக பயன்படுத்துகிறது. இந்த விவகாரத்தில் சீனா அதிகப்படியாக எதிர்வினையாற்றுகிறது. இப்படிப்பட்ட நடவடிக்கையில் சீனா இறங்கும் என்பதை எதிர்பார்த்தோம். வரும் நாள்களில் இவை மேலும் தொடரும் என்றும் எதிர்பார்க்கிறோம். சீனாவை எதிர்கொள்ள அமெரிக்கா தயாராக உள்ளது. எவ்வித நெருக்கடிகளையும் நாங்கள் தேடிச் செல்லமாட்டோம் விரும்பவும் மாட்டோம். அதே நேரம், பல ஆண்டுகளாக தாய்வானை நாங்கள் ஆதரித்து வருகிறோம். சுதந்திரமான இந்தோ - பசுபிக்கை பாதுகாத்து வருகிறோம்.

எனவே, மேற்கு பசுபிக் கடல் பகுதியில், சர்வதேச சட்டங்களுக்கு உட்பட்டு கடல் மற்றும் வான்வெளியில் எங்கள் நடவடிக்கை தொடரும். அதை யாரும் தடுக்க முடியாது. - இவ்வாறு அவர் கூறினார்.

இதற்கிடையே ‘நான்சி பெலோசி சீனாவின் உள்நாட்டு விவகாரங்களில் அத்துமீறித் தலையிடுகிறார்’ எனக் குற்றஞ்சாட்டி, அவர் மீது சீன வெளியுறவு அமைச்சகம் பொருளாதாரத் தடைகளை விதித்து உள்ளது.

# முதலீட்டாளர்களின் நம்பிக்கையை ஊக்குவிக்க முதலீட்டுச் சபை நடத்தும் 'வெபினார்' தொடர்



முதலீட்டுச் சபை பணிப்பாளர் நாயகம் ரேணுகா எம்.வீரகோன்

வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஊக்குவிப்பதற்கான உச்ச நிறுவனமான முதலீட்டுச் சபை (BOI), பின்னடைவுச் சூழ்நிலையிலும் புதிய முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில், இலங்கையில் சாத்தியமான முதலீட்டு வாய்ப்புகளைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட நிகழ்நிலை இணையவழிக் கருத்தரங்குகளைத் தொடங்கியுள்ளது.

கடினமான காலங்கள் முதலீட்டாளர்களுக்கு நாட்டில் புதுமையான முதலீடுகளில் ஈடுபடுவதற்கான புதிய வாய்ப்புகளுக்கான ஒரு காலமாக இது இருக்கும் என்று முதலீட்டுச் சபை கருதுகிறது.

எனவே, நாட்டிற்கு புதிய முதலீடுகளைக் கொண்டுவரும் வகையில், சாதகமான திசையில் நகர்வதை உறுதிசெய்வதற்கு முதலீட்டுச் சபை எந்த வாய்ப்பையும் விட்டுவைக்க விரும்பவில்லை.

மேலும், முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படும் சேவைகளை ஒழுங்குபடுத்தும் நோக்கத்துடன் உலக வர்த்தக மையத்தின் மேற்கு கோபுரத்தில் 27 ஆவது மாடியில் சமீபத்தில் வெளியிடப்பட்ட முதலீட்டாளர் வசதி நிலையம் (IFC) பற்றிய விழிப்புணர்வை முதலீட்டாளர்களுக்கு இணைய வழிக்கருத்தரங்கு தொடர் உருவாக்குகிறது.

உலகெங்கிலும் உள்ள பங்கேற்பாளர்களுடன் உற்பத்தித் துறையை உள்ளடக்கிய ஸூம் மூலம் தொடரின் முதல் நிகழ்ச்சி கடந்த வாரம் நடைபெற்றது. முதலீட்டுச் சபை பணிப்பாளர் நாயகம் ரேணுகா எம்.வீரகோன் வழங்கிய விளக்கக்காட்சியுடன் 60 நிமிட வலையரங்கம் ஆரம்பமானது. அங்கு அவர் முதலீட்டு சூழல், முதலீட்டு ஊக்குவிப்பு, திறமை மற்றும் கல்வி, சந்தை அணுகல், வாழ்க்கைத் தரம் மற்றும் இருப்பிட நன்மைகள் போன்ற பகுதிகளை அடிக்கோடிட்டுக் காட்டும் வகையில் 'ஏன் இலங்கை' என்ற தலைப்பில் ஒரு மேலோட்டத்தை வழங்கினார்.

உற்பத்தித் துறைக்கு முதலீட்டுச் சபை வழங்கும் சலுகைகள் மற்றும் வசதிகளைப் பற்றி எடுத்துக்காட்டிய அதேவேளையில், இலத்திரனியல் மற்றும் மின்னியல் உதிரிப்பாகங்கள், வள்ளம் கட்டுதல், இறப்பர் சார்ந்த பொருள்கள், புடவை மற்றும் ஆடைகள் உற்பத்தித் துறை, வாகனங்களின் பாகங்கள் மற்றும் மருந்து மற்றும் மருத்துவ சாதனங்கள் ஆகியவற்றின் கீழ்வரும் கைத்தொழில்களில் கிடைக்கும் முதலீட்டு வாய்ப்புகள் குறித்து திருமதி வீரகோன் விளக்கினார்.

அமர்வைத் தொடர்ந்து கேள்வி - பதில் அமர்வு நடைபெற்றது. இது பதிவுசெய்யப்பட்ட பங்கேற்பாளர்கள் தங்கள் கேள்விகளை சிரேஷ்ட முதலீட்டுச் சபை அதிகாரிகள் குழுவிடம் முன்வைக்க உதவியது.

சீனா, ஜப்பான், இந்தியா, கொரியா, சிங்கப்பூர், தாய்லாந்து, மலேசியா, இந்தோனேஷியா, பாகிஸ்தான், வங்காளதேசம், ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி, சுவிட்சலாந்து, பெல்ஜியம், நெதர்லாந்து, லக்சம்பர்க், டென்மார்க், நோர்வே, சுவீடன், பின்லாந்து, துருக்கி, அமெரிக்கா மற்றும் கனடா உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 206 பங்கேற்பாளர்கள் பதிவு செய்ததில் இணைய வழிக் கருத்தரங்கிற்கு அபரிமிதமான ஆர்வம் இருந்தது.

வலைப்பதிவுத் தொடர் குறித்து கருத்து தெரிவித்த முதலீட்டுச் சபை தலைவர் ராஜா எதிரிசூரிய 'நாட்டில் நிலவும் கொந்தளிப்பான சூழ்நிலைகளைப் பொருட்படுத்தாமல் இலங்கையில் முதலீடு செய்வதனை ஊக்குவிப்பதன் மூலம் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை மேம்படுத்தும் வகையில் இவ்வாறான இணைய வழிக் கருத்தரங்குத் தொடர் மிகவும் பொருத்தமானது' என்றார்.

'முதல் இணையவழிக் கருத்தரங்குத் தொடரைப் பொறுத்த வரையில், உலகின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த பங்கேற்பாளர்களை, மிகுந்த ஆர்வத்துடனும், உத்வேகத்துடனும் இணையவழிக் கருத்தரங்குத் தொடரில் இணைந்திருப்பதைப் பார்க்கும் போது, இது மிகப்பெரிய வெற்றியாக அமைந்திருந்தது என்றும் இலங்கை பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கும் இத்தருணத்தில் இதுவும் ஊக்கமளிக்கும் காரணியாகும்' என்றும் முதலீட்டுச் சபையின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

இந்தத் தொடரின் அடுத்த இணைய வழிக் கருத்தரங்குகள் முறையே தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், விவசாயம் மற்றும் உணவுப் பதப்படுத்துதல், சேவைத் துறை மற்றும் பயன்பாட்டுத் துறைகள் போன்ற துறைகளை ஆராய்வதுடன் முதலீட்டுச் சபையின் இணையத்தளமான www.investsrilanka.com மூலம் அறிவிக்கப்படும்.



முதலீட்டுச் சபை தலைவர் ராஜா எதிரிசூரிய

## நேர்காணல் ......

(12ஆம் பக்கம் பார்க்க)

**08) தற்பொழுது நீங்கள் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உங்களது அனைத்து கலைத்துறை சார் செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகின்றீர்கள். அவ் வகையில், அவ் மாவட்டத்தில் உங்களுக்கான அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளதா?**

நிச்சயமாக ஒப்பீட்டளவில் எமது மாவட்டத்துடன் ஒப்பிடுகையில் யாழ்ப்பாணத்தில் இந்த தமிழ் சுயாதீன இசைத் துறை தொழில் ரீதியாக சிறு முன்னேற்றத்தைக் கண்டுள்ளது என்பதை உணரக்கூடியதாக இருக்கின்றது. அத்துடன் இங்கு இவ் கலை வட்டம் பெரியளவில் இருப்பதனால் இங்கு போதியளவு ஆதரவும் கிடைக்கின்றது. அத்துடன் யாழ்ப்பாண திரைப்படக் கல்லூரி மற்றும் யாழ் எழில் இணைய வானொலி தலைவர் திரு.சுதர்சனின் ஆதரவுடனே என்னுடைய கலையகத்தை இங்கே அமைத்து என்னுடைய பாடல் வேலைகளை செய்து வருகின்றேன். அந்தவகையில் இசைக்கருவி இசைக்கும் கலைஞர்களை நேரடி ஒலிப்பதிவு செய்வதற்கு என்னுடைய கலையகம் யாழ்ப்பாணத்தில் இருப்பதே எனக்கு மிகவும் சுலபமாக உள்ளது.

**09) இத்துறையில் நீங்கள் எதிர்நோக்கும் சவால்கள் குறித்து?**

இலங்கையைப் பொறுத்தவரையில் இந்தக் காலகட்டத்தில் படப்பிடிப்புகளுக்கு பயணம் செய்வது மற்றும் வெளி மாவட்டங்களில் இருந்து ஒலிப்பதிவுகளுக்காக பாடகர்களை அழைத்துக் கொள்வதிலும் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்குகின்றேன். எரிபொருள் பிரச்சினை மற்றும் போக்குவரத்து செலவுகள் அதிகமாக இருப்பதாலும் போக்குவரத்து பிரச்சினைகளை சந்திக்க வேண்டியுள்ளது. அதனால் ஒரு பாடலுக்கான தயாரிப்பு செலவும் அதிகமாக காணப்படுகிறது. இப்பொழுது சமூகவலைத் தளங்களில் ஒரு பாடலை மக்களிடையே கொண்டு சேர்ப்பதற்கான களம் அதிக அளவில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. முந்தைய காலத்தைப்போல ஒரு பாடலை மக்களிடையே கொண்டு சேர்ப்பதற்காக வானொலி ஊடகங்களின் ஆதரவை எதிர்பார்க்க வேண்டிய நிலை இப்போது பெரியளவிலான சவாலாக எனக்கு தோன்றவில்லை. அத்துடன் 12 வருடங்களாக நிறைய சவால்களை சந்தித்து இன்னும் ஓய்வு கொடுக்காமல் முயற்சிகளை செய்து கொண்டே இருக்கிறேன். அதனாலும் சவால்கள் சகஜமான ஒன்றாகி விட்டன.

**10) இசைத்துறையில் உங்களுக்கு கிடைத்த வெற்றிகள், வாய்ப்புகள் குறித்து?**

சிறந்த சொல்லிசை கலைஞனுக்கான விருதுகள் ஐந்தை பெற்றிருக்கிறேன். தனியார் வானொலி ஒன்றின் மூலம் 2016இல் இசையமைப்பாளர் அனிருத்தை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. முன்மாதிரியாக பார்த்து வளர்ந்த கலைஞர்களான க்ரிஸான் மகேசனுடன் பாடல் செய்யக் கிடைத்ததும் அவருடைய இசைக்குழுவில் 3 வருடங்கள் வேலை செய்ததும் எனது விடாமுயற்சிக்கு கிடைத்த பரிசாகவே பார்க்கிறேன்.

**11) உங்களது எதிர்கால படைப்புகள் குறித்து?**

சொல்லிசை பொடியன்ஸ் என்ற நாமத்துடன் புதிய இசைக்குழு ஒன்றை ஆரம்பித்து உள்ளேன். தனித்துவமான படைப்புகளுடன் இதனை நிச்சயமாக உலகளவில் கொண்டு செல்வதற்கு வேலைகள் நடைபெறுகின்றன. அத்துடன் திருக்குறள் மற்றும் எமது சங்ககாலத்து கதைகளை சொல்லிசை வடிவில் செய்து கொண்டிருக்கிறேன். அதனுடன் வெளிவரவிருக்கும் எனது தனிப்பாடல்களிலும் வேலை செய்கிறேன். விரைவில் அவை வெளியாகும்.

**12) நிறைவாக, உங்களைப் போன்று சாதிக்க நினைக்கும் கலைஞர்களுக்கு கூற விரும்புவது?**

ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு கொள்கை நிச்சயமாக இருக்க வேண்டும். யாரும் யாரையும் பின்பற்ற வேண்டாம். உங்கள் முயற்சிகளில் விழிப்பாகவே இருங்கள். ஒரு நாள் உலகம் உங்களை உற்றுப் பார்க்கும். வித்தியாசமான படைப்புகளை உருவாக்குங்கள். முக்கியமாக உலக நாடுகளின் இசையை ரசியுங்கள். உங்கள் தேடல் விரிவானால் உங்களுக்குள் புதிதாக ஒன்று உருவாகும்.

‘வீணை மைந்தன்’ சண்முகராஜாவின் பவளவிழா நிகழ்வுகள் இன்று யாழ்ப்பாணம் நாவலர் வீதி, நாவலர் மண்டபத்தில் நடைபெறுகின்றமையை ஒட்டி இந்தக் கட்டுரைத் துளிகள் பிரசுரமாகின்றன.

# இன்று பவள விழாக் காணுகின்ற ‘வீணை மைந்தன்’ சண்முகராஜா

எங்கள் பண்பாட்டின் அழகிய ஆளுமையாக விளங்கும் வீணை மைந்தனுக்கு அகவை 75 வாழ்த்தினைத் தரும் இந்தத் தருணம் அர்த்தம் நிறைந்தது. அளவிலா மகிழ்ச்சி தருவது.

அனுபவம் என்ற பல்கலைக்கழகத்தில் நிறையவே கற்றுக்கொண்ட வீணை மைந்தன் சண்முகராஜாவின் அயராத தேடல் மகத்துவமானது. தமிழர் இனவரையியல், அரசியல், கலைகள் என அனைத்துப் பொருண்மைகளினூடாகவும் அவரது பயணம் அழகாய் அமைந்துள்ளது. எந்தையும் தாயும் இருந்து குலாவிய எங்கள் வலிவடக்கின் மைந்தர்களாய் பள்ளிப்பருவம் முதலாகவே அண்மையிலும் சேய்மையிலும் அவர் ஆளுமையின் படிமலர்ச்சியை நயந்து வந்திருக்கிறேன். முன்னைப் பழமைக்கும் பின்னைப் புதுமைக்கும் பேற்றுமப் பெற்றியனாக ‘கணந்தொறும் கணந்தொறும்’ தன்னைப் புதுப்பிக்கும், இடையறாத அவரது செயல்வீரம் எமக்கெலாம் முன்மாதிரியானது. வெறும் வாய்ச்சொல் வீரராக இல்லாமல் தாம் வகுத்துக் கொண்ட இலக்குகளுக்கு வாழ்வு தரும் வண்ணமாக இளமைப்பருவ முதலாகவே சமூகப்பயனான அமைப்புகளைத் தோற்றுவித்து கலை – இலக்கிய – சமுதாய மேம்பாட்டுப் பணிகளை ஆற்றி வருபவர் வீணை மைந்தன்.

உலகமயமாக அலைகளிடையும் சுயம் இழக்கும் அவலங்களிடையும் புலம்பெயர் வாழ்விலும் சுயம் காக்கும் – மீட்கும் ஆளுமையாக அவரது பணிகள் விரிகின்றன. அவர் மேன்மைகள் யாவிலும் ஆதார சுருதியாக, சுய நிமிர்வின் அடையாளமாக இலங்கை வேந்தன் இராவணன் வீணை இரண்டறக் கலந்துள்ளது.

கொடிதான இளமையில் வறுமை, கடிதான இடம்பெயர், புலம்பெயர் அவலங்களையெல்லாம் தாண்டி நிமிர்ந்த பண்பாட்டு மேன்மைக்கான செம்மையான அவர் வாழ்வின் உண்மை அழகைக் கொண்டாடும், ‘வீணை மைந்தன் – 75’ பவள விழா இதழை வெளியிடுவதில் யாழ். இலக்கிய வட்டம் பெருமிதம் கொள்கின்றது.

- பேராசிரியர் கலாநிதி என். சண்முகலிங்கன் -
(தலைவர், யாழ். இலக்கிய வட்டம்,
முன்னாள் துணைவேந்தர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)



## பவள விழாக் காணும் பல்துறை ஆற்றலாளர்

- கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் -

**உலகம் உய்யத் தோன்றியது நம் தமிழ்மொழி.**
**பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் இவ்வுலகில் இருந்தபோதும்,**
**தமிழ்மொழியின் தரம் அறிந்து வாழ்வோர் ஒரு சிலரேயாம்.**
**அங்ஙனம் தமிழ்த்தாயின் தாசர்கள் ஆனோர்,**
**அவ் அன்னையைத் தம் உயிரில் பதித்துக் கொண்டதால்,**
**காலத்தாலும் இடத்தாலும் எங்கு பெயர்ந்து சென்றபோதும்,**
**அவ் அன்னையின் தாள் தொழுது வாழ்தலையே,**
**தம் வாழ்க்கைக் கடனாய்ப் போற்றி நிற்பர்.**
**அத்தகைய உயர்ந்தோர் வரிசையில் நிலை நிற்பவரே,**
**ஈழத்தில் பிறந்து இன்று கனடாவில் வாழ்ந்து வரும்,**
**கவிஞர் ‘வீணை மைந்தன் ஆவார்.**
**தேசங் கடந்தபோதும் தமிழ்மேல் நேசங் கடவாத இப்பெரியார்,**
**தான் சென்று வாழும் கனடா மண்ணுக்கு,**
**தமிழை நல்கிப் பெருமை கொண்டு நிற்கிறார்.**
**கவிஞர், எழுத்தாளர், விமர்சகர், சஞ்சிகை ஆசிரியர், பத்திரிகை ஆசிரியர் என,**
**பற்பல தமிழ் முகங்களைக் கொண்டிருக்கும் ‘வீணை மைந்தன் அவர்களை,**
**உலகளாவி பல இலக்கிய அமைப்புக்கள் பாராட்டி கௌரவித்து உள்ளன.**
**பல நூல்களை ஆக்கித் தமிழ் அன்னையின் தரம் உயர்த்திய,**
**இப்பெரியாரின் பவள விழாச் செய்தி அறிந்து எல்லை அற்ற மகிழ்வு கொள்கிறேன்.**
**‘வீணை மைந்தன்’ அவர்களின் ஆயுளும் பணிகளும் மென்மேலும் சிறக்க,**
**என்னை வாழ்விக்கும் கம்பனாட்டாழ்வான் பதம் பணிந்து வாழ்த்துகிறேன்.**
**‘இன்பமே எந்நாளும் துன்பமில்லை’**

### இலங்கையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கை எதிர்கொள்ளும் நெருக்கடிகளில் இருந்து விடுபடும் நடவடிக்கைகளிற்கு புதிய அரசாங்கம் தலைமை தாங்கும் என எதிர்பார்ப்பதாக தெரிவித்துள்ள அவர், அபிவிருத்தி என்ற சரியான பாதையில் நாட்டை இட்டுச்செல்லும் என எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய இறைமை, சுதந்திரம் ஆலோசனைகள் மூலம் அதன் கடன் முயற்சிகளிற்கு தீர்வை காணும் கொள்கையைத் தொடர்ந்து பேணுவது, சமூக ஸ்திர தன்மையை பேணுவது, பொருளாதார மீட்சியை ஸ்திரப்படுத்துவது போன்ற இலங்கையின் நடவடிக்கைகளிற்கு சீனா உறுதியான ஆதரவை அளிக்கின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

### சர்வ கட்சி அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொதுஜன பெரமுன கட்சியின் அலுவலகத்தில் பிரதமர் தினேஷ் குணவர்தனவுடனான கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஜனாதிபதியை இராஜினாமா செய்ய வைக்கும் ஆரம்ப இலக்கு நிறைவேறியதன் பின்னர் காலி முகத்திடலில் போராட்டக்காரர்களிடம் எவ்வித திட்டமும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் தன்னை நிரூபித்து நாட்டை வழி நடத்த புதிய ஜனாதிபதிக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

மேலும் நாட்டில் கிளர்ச்சி உருவாகும் பட்சத்தில், அதை அடக்குவதன் மூலமே கட்டுப்படுத்த முடியும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம்-85

**தொடர்ந்தவை**

மதியுரைஞர் பாலசிங்கம் பார்த்தசாரதியை புதுடில்லியில் சந்தித்தது ஜனவரி 1985 இல்.

அப்போது அவர் தமிழர்களின் எல்லாத் தரப்புகளும் – அரசியல் குழுக்கள், விடுதலை குழுக்கள் எல்லாம் – ஒன்றிணைந்து, ஒற்றுமையாக ஜே.ஆரின் நரித்தனங்களுக்கு எதிராகத் தீர்மானங்கள் வைக்கக்கூடிய உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தி இருந்தார். இந்தச் சந்திப்பின் விவரங்களும் அறிவுறுத்தல்களும் பிரபாகரனுக்கும் மற்றைய தலைவர்களுக்கும் கூட தெரியப்படுத்தப்பட்டன.

புதுடில்லியில் பதவிகளை ஏற்ற புதிய அரசு மற்றும் அதிகாரிகளின் நோக்கைக் கணித்த விடுதலைக் குழுக்களில் ரெலோவும் விடுதலைப் புலிகளும் இரண்டு பாரிய தாக்குதல்களை ஸ்ரீலங்காப் படையினருக்கு எதிராக நடத்தின.

19 ஜனவரி 1985இல் ரெலோ யாழ்தேவி ரயிலுக்கு முறிகண்டியில் குண்டு வைத்ததில் 22 இராணுவத்தினரும், 10 பொதுமக்களும் இறந்தனர். பல சிப்பாய்கள் காயங்களுக்குள்ளாகினர்.

13 பெப்ரவரி 1985இல் விடுதலை புலிகள் கொக்கிளாயில் அமைந்த இராணுவ முகாமைத் தகர்த்ததில் 106 க்கும் மேற்பட்ட இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். இதற்குப் பழி வாங்கலாக இராணுவம் முல்லைத்தீவில் இருந்த அகதி முகாமில் புகுந்து நிராயுதபாணிகளான அப்பாவிப் பொதுமக்கள் 52 பேரைச் சுட்டுத் தள்ளியது.

சென்னையில் இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் "தமிழர்கள் மீதான இனப்படுகொலையைத் தடுக்க இந்தியா முன் வர வேண்டும்" என வேண்டுகோள் விடுத்தார்கள். ஆனால் புதுடில்லி அதனைக் காதில் போடாததால் எல்லாத் தமிழ்த் தரப்புகளுக்கும் இந்திய அரசின் புதிய போக்குகள் புரிந்தன.

மேற்கூறிய தாக்குதல்களை அடுத்து இந்தப் புதிய அணுகுமுறைகள் எல்லா விடுதலைக் குழுக்களுக்கும் இந்திய அதிகாரிகளால் விளங்கப்படுத்தப்பட்டன.

பிரபாகரனும் பாலசிங்கமும் றோவின் உயர் அதிகாரி சக்சேனாவை சந்தித்த பொழுது அவர் தனிநாடு ஒன்றை உருவாக்கும் திட்டம் இந்திரா காந்தியிடமோ அல்லது புதிய அரசிடமோ கூட இல்லை என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

பிராந்தியப் பாதுகாப்புக்குப் பாதகமாக ஜே.ஆர். சில நாச சக்திகளை இந்தியாவிற்கு எதிராக அரவணைப்பதும், 83 கலவரங்களின் பாரதூரமான விளைவுகளால் லட்சக்கணக்கான தமிழ் அகதிகள் தமிழ்நாட்டுக்கு வந்தமையால் – இந்தியத் தமிழ் மக்களின் பிரிவினை உணர்ச்சிகளும் தூண்டப்படுவதால் – இந்தியாவில் உள்நாட்டு ஒற்றுமைகளுக்காக அவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும், அதே சமயம் ஈழத் தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வு தேவை என்பதற்காக விடயங்களை முன்நகர்த்த இவ்வளவு முயற்சிகளும் நடந்தன. இனி பேச்சு வார்த்தைகளிலேயே அவற்றைத் தீர்க்க முயல்வோம் எனத் திட்டவட்டமாக தெரிவித்து, அவற்றுக்கு விடுதலைப் புலிகளும் மற்றக் குழுக்களும் கட்டுப்பட வேண்டும் என்பதில் தீர்மானமாகவும் இருந்தார்.

சக்சேனாவின் விளக்கங்களைப் பிரபாகரன் ஏற்றுக் கொண்டாலும், ஆயுதத் தாக்குதல்களை நிறுத்த வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஜே.ஆரை ராஜீவ் சரிவரப் புரிந்து கொள்ளவில்லை என்றே அவர் நினைத்தார்.

இந்தச் சந்திப்பைத் தொடர்ந்து அவர்கள் இருவருக்கும் இந்தியாவின் புலனாய்வுத் துறையின் மூத்த அதிகாரி நாராயணனுடனான சந்திப்பு நடந்தது. அவர் சக்சேனாவின் அதிகாரத் தோரணைகளுக்கு மாறாக நிலைமைகளை புரிந்து அனுதாபியாக இருந்தாலும், இந்தியாவின் புதிய அனுகுமுறை தென்னாசியாவை சமாதானப் பிரதேசமாக வைத்திருக்க வேண்டும் என்பதாக இருப்பதாலும், நாட்டின் உள்ளேயே எத்தனையோ பிரிவினைவாதக் கோரிக்கைகளைக் கட்டுப்படுத்த வேண்டி இருப்பதாலும், பேச்சுவார்த்தையைத்தான் இந்தியா முன்னெடுக்க விரும்புகிறது, அதற்கு அரசியல் தலைவர்கள், விடுதலைக் குழுக்கள் யாவரும் உதவியாக வேண்டும், ஸ்ரீலங்கா அரசில் அவநம்பிக்கைகள் இருக்கலாம், ஆனால் தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வு பெறப்படும் என உறுதிகள் கொடுத்து, இந்தியா ஜே.ஆருடன் தொடங்கவிருக்கும் பேச்சுக்களுக்கு அனுசரணை தரக் கோரினார்.

**திம்புவுக்கு முன், திம்பு, திம்புவுக்குப் பின்!**

இவ்விடயம் குறித்துப் பலவாறு எழுதப்பட்டுள்ளமையால் அவை பற்றி மீண்டும் பதியாமல் காலவரையில் நடந்த சிலவற்றை விளக்கத்திற்காகக் குறிக்கிறேன்:-

★ இந்திய வெளிவிவகாரச் செயலாளர் புதுடில்லிக்கும் கொழும்புக்கும் இடையே ஜே.ஆரைப் பேச்சு வார்த்தைகளுக்கு இணங்க வைப்பதற்காகப் பறந்து கொண்டு இருந்தார்.

★ விடுதலைக் குழுக்களான ரெலோ, ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ்., விடுதலைப் புலிகள் ஆகிய தரப்புகள் இணைந்து தமிழ் தேசிய விடுதலை முன்னணி (ENLF) என இயங்க ஒத்துக்கொண்டன.

★ அந்த இணைக்கத்தில் விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தில் கோட்டையில் இருந்த பொலிஸ் நிலையத்தைத் தாக்கி அழித்துப் பல ஆயுதங்களைக் கைப்பற்றினார்கள்.

★ மற்றைய குழுக்களும் தமிழ்ப் பகுதிகளில் பல இடங்களில் தொடர்ந்து பரவலாகத் தாக்குதல்களை நடத்தியமையால் இராணுவம் நிலைகுலைந்து, ஜே.ஆரும் போர் நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டால் தான் பேசுவதற்கு ஒத்துக் கொள்வார் எனத் தெரிவித்தார்.

இது தமிழர் தரப்புகளுக்குத் தெரியப்படுத்தப்பட, விடுதலைக் குழுக்களின் ENLF மேற்படி ஸ்ரீலங்கா அரசு தங்களது தீர்வை வெளிப்படையாக பேச்சுக்களுக்கு முன் தெரிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை இந்திய அரசுக்கு முன் வைத்தது. அதற்கு ஸ்ரீலங்கா அரசோ இந்தியாவோ இணங்கவில்லை. பேச்சுக்களே தொடங்க முன் அதனை எதிர்பார்க்க முடியாது என்பது அவர்களது நிலைப்பாடு.

★ ஜே.ஆர். மேலிருந்த அவநம்பிக்கைகளால் போர் நிறுத்த ஒப்பந்தம் ஸ்ரீலங்காவுக்குசாதகமாகவும் விடுதலை குழுக்களுக்குப் பலவீனத்தையும் கொண்டுவரும் என்ற தொனிகளில் றோவின் சந்திரசேகரனுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டன. முன்னர் அனுகூலமாகவும் ஆதரவாகவும் இருந்த சந்திரசேகரன் இப்போது இவற்றை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டார். ராஜீவும் பண்டாரியும் பலத்த முயற்சிகளின் பின் பேச்சு வார்த்தைகளை ஏற்படுத்துகிறார்கள், ஜே.ஆர். விடுதலைக் குழுக்களைச் சந்திக்க மறுக்கிறார், ஆனால் அவர்களும் பங்குபற்ற வேண்டும் என இந்தியா உறுதியாக நிற்பதில் – அது நடப்பதில் – விடுதலைக் குழுக்களுக்கும் அரசியல் அங்கீகாரம் கிடைக்கிறது, போதுமான அளவு தாக்குதல்கள் நடந்து விட்டன, அவற்றின் பயனைக் காரிய சித்தியாக்கவே முன்னெடுப்புகள் தேவை, இலங்கை நாட்டை முழுமையாகப் பலவீனப்படுத்தி பல பகுதிகளை உருவாக்கி விட்டால் பேசுவதற்கென ஓர் அரசு இருக்காது, அதனைக் கணக்கில் கொண்டு போர் நிறுத்தத்துக்கு ஒப்புக் கொள்ளுங்கள், அதனால் உங்களுக்குப் பாதிப்பு வருமானால் அதை இந்தியா கவனிக்கும், தமிழர் தரப்பு கைவிடப்பட மாட்டாது என்பது அவரது வாதம். அதன்பின் 18 ஜூன் 1985 போர் நிறுத்த அறிவிப்பு தெரியப்படுத்தப்பட்டது.

★ போர் நிறுத்தத்தின் ஆதங்கங்களால் தொடர்ந்தும் பிரபாகரனும் பாலசிங்கமும் மற்றைய ENLF தலைவர்களும் இணைந்து பேச்சுவார்த்தைகளுக்கு முன் ஜே.ஆர். தமது தீர்வுத் திட்டத்தின் அடிப்படையை முன்வைத்தால் தான் தாங்கள் பங்கு பெற ஒப்புக் கொள்வோம் என்ற மகஜரை இந்திய அரசுக்கு றோவின் சந்திரசேகரன் மூலம் அனுப்பினார்கள். சந்திரசேகரனின் பதிலில் கடுமை தெரிவிக்கப்பட்டது. அநாவசியமான நிபந்தனைகள் திணிக்கப்படுவதாக இந்திய அரசியல் மேலிடங்கள் கருதுவதாலும், அவை பற்றி விளக்கங்கள் தர விடுதலைக் குழுக்களின் எல்லா தலைவர்களும் – பிரபாகரனும் கூட – புதுடில்லிக்கு அழைக்கப்படுவார்கள் என்ற செய்தியைத்தான் சந்திரசேகரன் தந்தார்.

★ மூன்று ஜூலை 1985 இந்திய இராணுவ விமானம் ஒன்றில் பிரபாகரன், பாலசிங்கம் ENLF இன் மற்றைய குழுக்களின் தலைவர்கள் புதுடில்லிக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அங்கு வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகளால் பேச்சுவார்த்தைகளுக்கு எடுக்கப்பட்ட முயற்சிகள், அவற்றுக்காக ஜே.ஆரினால் தரப்பட்ட முட்டுக்கட்டைகள் என்பன பற்றி விளக்கங்கள் தரப்பட்டு விடுதலை குழுக்கள் அவற்றில் ஆதரவு தந்து ஈடுபடுவதில் உள்ள நன்மைகளும் விளங்கப்படுத்தப்பட்டன. அதைத் தொடர்ந்து றோவின் மேல் அதிகாரி சக்சேனாவுடன் சந்திப்பு இருந்தது. அவர் வழமை போலவே ஆணித்தரமாக இந்தியாவின் உண்மையான – தமிழர் சார்பின் நன்மைக்கான – முயற்சிகளுக்கு ஆதரவு தரவேண்டும் என்றும், கடைசியில் அப்படி அனுசரணை தராவிட்டால் விடுதலைக் குழுக்கள் இந்தியாவில் இயங்குவதற்கும், இந்தியக் கடல் எல்லைகளில் கட்டுப்பாடு இல்லாமல் உலாவருவதற்கும் தடை விதிக்கப்பட்டு, அவர்கள் ஸ்ரீலங்காவின் எல்லைக்குள்ளேயே கட்டுப்படுத்தப்பட வேண்டி வரும் என்ற கம்பையும் தூக்கி போட்டார். நீங்கள் நிர்பந்தங்களை வைத்து பேச்சில் பங்கு பற்றுவதும், விடுவதும் உங்களைப் பொறுத்தது, யோசித்து முடிவைச் சொல்லுங்கள் என சந்திப்பு முடிக்கப்பட்டது.

ENLF தலைவர்களுக்கு முகங் கள் வாடின. ஹோட்டலுக்குத் திரும்பி, நிலைமைகளை அசைபோட்டு, எல்லோரும் ஒற்றுமையாகத் திம்புவில் நடக்கும் பேச்சு வார்த்தைகளில் பங்குபற்றுவதாகத் தெரிவித்தனர்.

இனி, திம்புவின் ஒற்றுமையைப் பார்ப்போம்.



திம்பு பேச்சுகளுக்கு முன்னர் ஹோட்டல் அறையில் ஈழத் தேசிய விடுதலை முன்னணியின் (ஈ.என்.எல்.எவ்வின்) தலைவர்கள் மந்திராலோசனை. ஈரோஸ் தலைவர் பாலகுமாரன், ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் பத்மநாபா, புலிகளின் தலைவர் பிரபாகரன், ரெலோ தலைவர் சிறீ சபாரத்தினம் ஆகியோர்.

(வளரும்)